விலை: 20/=

நமது
செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்
# முரசொலி
නමදු මුරසොලි Namathu Murasoly
வார இதழ்

முரசு - 01 (11.10.2013 - 17.10.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 07

பக்கம் 11



## இனப்படுகொலையை ஐ.நாவில் பதிந்த முதல் தமிழன்!

பக்கம் 02




## யாழ்ப்பாணத்திற்கான ஆறு?

PUBLIC LIBRARY JAFFNA



# சரியா? தவறா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவை நாளும் விளையவே உண்மையை நேர்மையாய் ஒலிக்கும் நமது முரசொலி

# இரணைமடுவும் தமிழர் எதிர்காலமும்

## தொடரும் ஓர் விவாதம்...

இரணைமடுக்குள நீரை யாழ்ப்பாணத்துக்கு திருப்பும் விடயம் அதிகளவில் கவனம் கொடுக்கப்படவேண்டிய விடயம். அத் திட்டத்தின் பின்னாகவுள்ள அரசியல் சமூக பொருளாதார இலக்குகளை தெளிவாக உணர்ந்து கொள்ளாமை எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பது துறைசார்ந்த வல்லுனர்களின் கருத்து. ஏனைய சகோதர தமிழ் ஊடகங்கள் கருத்தில் எடுக்க மறந்த இவ் விடயத்தை நமது முரசொலி கையில் எடுத்துள்ளது. இரணைமடு தொடர்பான விடயங்கள் இயன்றவரை எதிர்காலம் நோக்கிய சிந்தனையில் வெளியிடுவது காலக்கடமை எனக் கருதி நமது முரசொலி தனது பணியை தொடங்கியுள்ளது. இரணைமடு தொடர்பில் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்பும் எவரும் எம்மோடு தொடர்பு கொள்ளலாம். எவரது கருத்துக்களும் எதிர்க்கருத்துக்களுக்கும் களம் கொடுக்க நமது முரசொலி தயாராகவுள்ளது.

ஆசிரியர்

இரணைமடுவிலிருந்து நீரினைப்பெறும் பெருமளவான கிளிநொச்சி விவசாயிகள் காலபோகத்தில் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு உதாரணமாக முரசுமோட்டை, ஊரியான், உடுப்பாற்றுக் கண்டல், கட்டைக்காடு, பெரியகுளம், காண்டாவளை பிரதேசங்களை கூறலாம். மேலும் காலபோகத்தில் பெய்யும் மழை சிறுபோகத்தில் பொய்க்கிறது. இதனால் சிறுபோக காலத்தில் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக வரட்சி இலகுவாக ஏற்படுகின்றது. இதற்கு 2012 ஆம் ஆண்டு சிறுபோகம் நல்ல உதாரணம். இவ்வாறு எதிர்பார்க்கும் மழைவீழ்ச்சி கிடைக்காத பட்சத்தில் குளத்தின் நீர்மட்டம் எதிர்பார்க்கும் அளவிற்கு வராதவிடத்து யாழ்ப்பாணம் நீர் கொண்டு செல்வதா இல்லை விவசாயத்திற்கு நீர் வழங்குவதா எனும் போது என்ன முடிவை இவ்விரு மாவட்ட அதிகாரிகளும் அல்லது மக்களும் எடுப்பார்கள்? "உயிரா...பயிரா..." எனும் போது "உயிர்" என்ற முடிவே எல்லோராலும் முன்வைக்கப்படும். அப்போது இரணைமடு



விவசாயிகளின் நிலைமை?.. பாதிக்கப்படபோவது என்னவோ விவசாயிகள் தான். அந்நிலை வருமாயின் இரு மாவட்டங்களிற்கிடையில் பிணக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவிடும்.

இரணைமடுக் குளத்தினை பொறுத்தவரையில் வலதுகரையில் அண்ணளவாக 3000 ஏக்கரும் இடது கரையில் அண்ணளவாக 17000 ஏக்கரும் ஏற்று நீர்ப்பாசனத்திற்கு அண்ணளவாக 1200 ஏக்கருமாக மொத்தம் 21200 ஏக்கர் நிலப்பரப்பிற்கு தற்சமயம் நீரினை வழங்குகின்றது. இவற்றினை விட வலது கரையில் விளாத்திக்காடு, கட்டைக்காடு, பெரியகுளம் போன்ற பிரதேசங்களும் இடதுகரையில் பன்னங்கண்டி உடுப்பாற்றங்கண்டல் கோரக்கன்கட்டு காஞ்சிபுரம் போன்ற பிரதேசங்களும் இரணைமடுக் குளத்தின் கீழ் உள்வாங்கப்பட காத்துக் கொண்டிருக்கும் நிலையில் மேலதிக நீரை தேக்கி யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முயல்வது எவ்வகையில் நியாயம்.

இவற்றினை விட இரணைமடுவின் கீழ் காலபோகத்தில் முழுப் பிரதேசமும் பயிர் செய்வதுடன் சிறுபோகத்தில் 14000 ஏக்கரிற்கு கூடுதலாக செய்த சரித்திரமும் இன்றுவரை இல்லை. ஆகையால் இரணைமடுவின் கீழ்வரும் 20000 ஏக்கர் நிலமும் ஏன் தென்பகுதி குளங்களின் கீழ்வரும் பயிர்செய்கை நிலங்கள் போல் சிறுபோகத்திலும் முழுவதும் செய்ய விவசாயிகளை ஊக்குவிக்க கூடாது. இன்று உலகளவில் மக்களிற்கு விவசாயத்தில் நாட்டம் குறைந்து வரும் நிலையில் (குறிப்பாக இளைஞர்களிற்கு) வெளிநாடுகளில் கூட இதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்படும் நிலையில் நாம் ஏன் மக்களின் விவசாய நாட்டத்தினை குறைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். ஆகையால் விவசாயிகளின் கோரிக்கைப்படி புது பிரதேசங்களையும் உள்வாங்கி காலபோகத்திலும் சிறுபோகத்திலும் கூடுதல் நிலங்களை பயிரிட நீர்ப்பாசன அதிகாரிகள் விவசாயிகளிற்கு ஒத்துழைப்பார்களா?

இரணைமடு கட்ட தொடங்கிய காலம் முதல் (1900 ஆம் ஆண்டு முதல்) அது படிப்படியாக உயர்த்தப்பட்டு இன்று 34' நீரினை தேக்குமளவிற்கு வந்தது விவசாய தேவை கருதியே அன்றி வேறு தேவைகளிற்கு அல்ல. இதனை விட இனிவரும் காலங்களில் விவசாய தேவைக்கு குளத்தை உயர்த்தி கூடுதல் நீரை பெற முயற்சிக்க முடியாது. ஏனெனில் 36' அடி வரை உயர்த்தி நீரினை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதால் இனிவரும் காலங்களில் அதனைபற்றி சிற்திக்கவே முடியாது. நீர்வழங் கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவிப்பது "நாம் யாழ்ப்பாணம் நீர் கொண்டு செல்லவிருப் பதனாலேதானே குளம் உயர்த்தப்படுவதும் அத னோடு இணைந்த மேலதிக அபிவிருத்திகளும் என்று". அப்படியாயின் இன்றுவரை 18' அடி நீர் சேமிக்க கூடிய குளத்தை 22' ஆக்கி அதன்பின் 30' ஆக்கி பின்னர் 34' வரை உயர்த்தியது எதற்காக? யாருக்காக? யாரால் இவை செய்யப்பட்டது. எனவே இனிவரும் காலங்களிலும் எமது மாகாணசபை விவசாயிகளின் தேவை கருதி குளத்தினை உயர்த்தும் ஆடிவினை எடுத்து அதனை நிறைவேற்ற முயலலாம். ஆனால் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தம்மால் தான் குளம் உயர்த்தப்படுகின்றதென்றும் அதனால் தான் எல்லா வசதிகளும் கிளிநொச்சிக்கு வருகின்றது என கூறுவது எவ்வளவு தூரம் சரியாக இருக்கும் என்று கூறமுடியுமா?

இவை எல்லாவற்றையம் விட இரணைமடு விவசாயிகளைப் பொறுத்தவரையில் மீள்குடியேற்றத்தின் பின்னர் அரசினால் திட்டமிடப்பட்டு வழங்கப்பட்ட விவசாயக்கடன் அவர்களை மீளாதகடன் தொல்லையில் ஆழ்த்தி இருப்பதுடன் இதனால் பலர் நஞ்சருந்தி தம்மை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கும் இது சென்றுள்ளது. கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் விவசாயம் 90வீதமான மக்களின் வாழ்வாதாரத் தொழில். ஆகையால் அதனை வீழ்ச்சி நிலைக்கு கொண்டுவருவது அவர்களைப் பொருளாதார நெருக்கடியில் ஆழ்திவிடும். இதனால் தமிழ் மக்களை பலவீனமாக்கும் அரசின் எண்ணம் இலகுவில் ஈடேறும். அவர்கள் இன்னொருவரை நம்பி இருக்க வேண்டிய நிலைக்கும் தள்ளப்படுவர்.

இது எவ்வாறெனின், கிளிநொச்சியில் இன்று யுத்தத்தின் பின்னர் ஒரு பரம்பரையே இல்லாமல் போய்விட்டது. அதாவது பேரனும் பேரனுமே இன்று இருக்கின்றார்கள். இடையில் ஒரு பரம்பரை யுத்தத்தால் இல்லாமல் போய்விட்டார்கள். இதனால் உரிய விவசாய மதிநுட்பங்கள் சரியான முறையில் புதுப்பரம்பரையை சென்றடையவில்லை. இதனால் மண்வெட்டி தூக்கிய அணைவருமே விவசாயிகள் என்ற நிலையே தற்சமயம் காணப்படுகின்றது. இன்று முன்னர் போன்று தோளில் மண்வெட்டியும் தலையில் கடகமும் சுமந்து கொண்டு வெறுங்காலுடன் தோட்டத்திற்கோ இல்லது வயலிற்கோ செல்லும் விவசாயிகள் உள்ளனர். எனவே கடன் இலகுவில் கிடைப்பின் விவசாயிகள் தமது எல்லை தாண்டி (பொருளாதார நிலமை மீறி) கடன் எடுத்து விவசாய மதிநுட்பங்கள் தெரியாமல் "தடி எடுத்தவன் தண்ட பிரசண்டன்" என்ற முறையில் விவசாயம் செய்து இன்று அந்த கடனிற்குரிய வட்டியை கூட கட்ட முடியாத மீளா கடன் சுமையில் மாட்டியுள்ளனர். இதனால் இவர்கள் தமது குடும்ப தேவைகளை, பிள்ளைகளின் கல்வியை நிறைவேற்ற முடியாத நிலைக்கு மெல்ல மெல்ல தள்ளப்படுகின்றனர். இவ்வாறு நிலமை கையை விஞ்சும் போது ஒன்று தங்களை மாய்த்துக் கொள்ளல் அல்லது தேவைகளை நிறைவேற்ற இன்னொருவரிற்கு அடிமையாகும் நிலமை ஏற்படும். இதன் போது இவர்களிடம் நினைத்ததை சாதிக்கலாம். இவ்வாறானதொரு நிலமையே இன்று வன்னியில் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்கள் அரசிற்கு எதிர்கருத்து கூறமுடியாத நிலமைக்கு சென்றுள்ளனர். இதனால் இவர்களினால் இன்று யாழ்ப்பாணம் நீர் வழங்குவதற்கு தமது எதிர்கருத்தை கூற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

(தொடர்ச்சி பக்கம் 08)

## யாழ்ப்பாணத்திற்கான ஆறு

யாழ் குடாநாடானது மிகவும் குறைந்தளவான 30" மழைவீழ்ச்சியினைப் பெறுகின்ற அதேவேளை வட மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களில் 60" இற்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

குடாநாட்டின் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கு ஏனைய பகுதிகளில் பெறப்படும் செல்வமாகிய மேலதிக மழை நீரை இப்பகுதிக்கு பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு நியாய பூர்வமான விருப்பமாகும்



கோலியது. இந்த ஆறு வவுனியாவில் உருவாகி புளியங்குளம் மாங்குளம் ஊடாக இரணைமடுக் குளத்தை நிரப்புகின்றது.

இதன் மேலதிக நீர் ஆனையிறவு ஏரியை அடைகின்றது. இது ஆனையிறவு பாலத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கடலுடன் இம் மேலதிக நீரானது வீணாக இப் பாலத்தினூடாக பெருங்கடலை சென்றடைகிறது

1949 மாசியில் ஓர் நாளில் இத் தெரு ஊடாக சுற்றுலாவிற்கு சென்ற குடும்பத்தினர் ஆனையிறவு பாலத்தின் அண்மையில் நண்பகல் உணவிற்காக இளைப்பாறினர். அவரின் சிறிய மகன் இவ் ஏரியில் கை கழுவும் பொழுது ஏரியின் மேற்குப்பகுதி கடலுடன் தொடர்புடையதாக இருந்தாலும் கிழக்குப் பகுதியில் நன்னீர் இருப்பது எவ்வாறு? என்று கேட்ட வினாவிற்கு அன்பான தந்தை அதன் காரணத்தை விளக்கினார்

அந்தச் சிறுவன் உடனடியாக "நாங்கள் கொஞ்ச மண்ணை காரில் கொண்டுவந்து இந்தப் பாலத்தை நிரப்புவோம், இதனால் நன்னீர் ஏரி உருவாகும் என்று பதிலளித்தான்.

இலங்கை எந்திரிமார் சங்கத்தின் ஞாபகார்த்த வெளியீட்டில் கௌரவிக்கப்பட்ட மிகச் சிலரில் ஒருவரானவரும் முன்னாள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றிய எந்திரி.எஸ்ஆறுமுகத்தின் தூரநோக்கை விளங்குவதற்கு அடிப்படையாக 1954 இல் முதன் முறையாக வெளியிடப்பட்ட இக் கட்டுரை மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.

தமிழாக்கம்

ஏந்திரி.ஏ.ரகுநாதன், இளைப்பாறிய நீர்ப்பாசனப் பணிப்பாளர்,

**ஏற்பாட்டுக்குழு, எந்திரி.S.ஆறுமுகம் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம்**

1930ம் தசாப்த ஆரம்பத்தில் குடாநாட்டில் பரந்திருந்த உவர் நீர் ஏரிகளை பயன்படுத்துமுகமாக அவற்றை நன்னீராக்க வேண்டும் என்ற கருத்தை காலஞ் சென்ற சட்டவாக்க சபை உறுப்பினரான மு.பாலசிங்கம் அவர்கள் தனது மனதில் உருவாக்கினார். மாமன்னர் பராக்கிரமபாகுவின் சிந்தனையின் ரூபமான மிகவும் பரவலாக பேசப்பட்ட கருத்தானது "வானத்திலிருந்து விழும் ஒரு மழைத் துளியும் மண்ணுக்கு பயன்படாமல் கடலை சென்றடைய விடக்கூடாது" என்ற சித்தாந்தமே மதிப்புக்குரிய மு.பாலசிங்கம் அவர்களது கருத்தாகும்

இந்தச் சிந்தனையே வட மாகாணத்தின் முக்கிய ஆதாரமான கனகராயன் ஆற்றின் வெள்ள நீரை முற்று முழுதாக பயன்படுத்துவது என்ற எண்ணக்கரு உருவாக வழி அந்த வருடம் கனகராயன் ஆற்றில் வெள்ளம் பாய்ந்தது. இரணைமடுக் குளம் நிரம்பி வான் பாய்ந்தது. மேலதிக நீர் தெருவின் கிழக்கில் உள்ள ஆனையிறவு ஏரியை நிரப்பியது. இரணைமடுக் குளம் தை மாதத்தில் வான் பாய விடப்பட்டாலும் மாசி மாதத்தில் கூட கிழக்கு ஏரி நன்னீராகவே காணப்பட்டது. எனினும் இப்பாலத்தினை மண் கொண்டுவந்து நிரப்பினாலொழிய இந்நீர் பாலத்தினூடாக கலக்கும் கடல்நீரால் விரைவாக உவர்நீராக மாறிவிடும்.

தற்போது நடைமுறைப்படுத்தும் ஆனையிறவு ஏரியை நன்னீராக்கும் திட்டத்தின் அடிப்படையானது கிழக்கு ஏரி வருடம் முழுவதும் நன்னீராகவே இருக்க வேண்டும்.

(தொடர்ச்சி பக்கம் 08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



நமது
முரசொலி
Namathu Murasoly
வார இதழ்
07

இல.: 18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.
E-mail : namathumurasoli@gmail.com, Tel : 0773673829

## நல்லிணக்கத் தீர்மானம் அரசியல் அஸ்தமனமா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், அதன் தலைவர் இ.சம்பந்தன் அவர்களதும் இராஜீய திறன்கள, தமிழர் உரிமை மீதான பற்றுறுதி தொடர்பில் காலத்திற்குக் காலம் எதிர் விமர்சனங்கள் உள்ளிருந்தே எழுவதுண்டு. குறிப்பாக சம்பந்தன் தன்னிச்சையாக முடிவுகள் எடுப்பதாகவும், அவ்வாறான முடிவுகள் தமிழர் நலன் சார்ந்து பாதகமானதாக அமைந்துவிடுகின்றன எனவும் அவரது அணியிலிருந்தே கூக்குரல்கள் கேட்பதுண்டு. ஈழத்தமிழினத்திற்கு இன்று தலைமை தாங்கும் ஒருவர் மீது அவரணியில் இருந்தே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எழுவது அவரது தனிப்பட்ட நலனில் எவ்வாறான தாக்கம் விளைவிக்கும் என்பதை விட தமிழர்களின் அரசியல் நலன்கள் மீது எதிர்மறையான விளைவுகளை நிச்சயம் தரும் என்பதில் மறுப்பில்லை.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு கலந்து பேசித் தீர்மானிக்காமல், அரசின் ஆசீர்வாதம், வழிகாட்டலுடன், இரகசியச் சந்திப்புக்களின் பின்னர், தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாகவும் அரசு தீவிர நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அரசினை நெருக்கடிகளில் இருந்து மீட்கின்ற மீட்பராகச் செயற்படுவதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லையெனினும் இதனை முழுமையாக நிராகரிப்பதற்கும் நியாயங்கள் இல்லை.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் பதிலாக நான் சரியான முடிவுகளையே எடுப்பேன், முடிவில் மாற்றமில்லை என்பது சண்டித்தனமேயன்றி, மதிக்கத்தக்க அரசியல் நாகரிகம் அல்ல. எப்போதும் சரியான முடிவுகளையே சம்பந்தர் எடுப்பார் அல்லது எடுத்திருந்தார் என்பது இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

பொன்சேகாவை ஆதரித்து மகிந்தவின் வெற்றிக்கு உதவியதும், மகிந்த அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தாமல் இனிப்பேச்சுக்கள் இல்லை எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு விலகிய போது தன்னிச்சையாக மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தமையும், கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தீர்மானத்திற்கு முரணாக ஜெனிவாவுக்குக் குழுவை அனுப்புவதில்லை என ஊடக அறிக்கை விடுத்தமையும் அரசைப் பாதுகாப்பதற்கானவை எனும் தோற்றப்பாட்டை தந்திருந்த தீர்மானங்களே. இவை கடந்த காலத்தில் சம்பந்தன் அவர்களைப்பற்றி அரசியலரங்கில் அதிகம் பேசவைத்திருந்தன.

இப்போதும் கூட, நல்லிணக்கத்துக்கான வழி எனவும் சர்வதேசத்தின் விருப்பம் எனவும் கூறி வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம் செய்வது பற்றி எடுத்துள்ள தீர்மானமும் பல மட்டங்களிலும் விமர்சிக்கப்படுகிறது. இந்தத் தீர்மானம் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியின் நெருக்கடி, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் போர்க்குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறத் தவறினால், சர்வதேச விசாரணை என்று ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள எச்சரிக்கை, மாகாண சபைகளுக்கான அதிகாரக் குறைப்பு எத்தனத்தினால் அரசின் மீது சர்வதேசம் கொண்டுள்ள நம்பிக்கையீனம் போன்ற நெருக்கடிகளில் இருந்து அரசு மீள்வதற்கு வழிசமைத்து என்பது கடுமையான விர்சனங்களின் சாரமாக இருக்கின்றது.

இதில் இன்னொரு ஆபத்தும் இருப்பதையும் மறுக்கமுடியாது. அண்மைக் காலத்தில் மகிந்த அரசுடன் நல்லிணக்கத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் முன்வந்த ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லீம்காங்கிரஸ், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி போன்ற கட்சிகள் சுயமிழந்து பலவீனப்பட்டு சிதைவடைந்தமை வரலாறு. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தவும், பலவீனப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் நாம் அறியாதவையல்ல ஒரு கட்டத்தில் தடை செய்வது கூட்டமைப்பினைப் பற்றியும் பேசப்பட்டது.

வேட்பாளர் தெரிவு முதல் அமைச்சர்கள் நியமனம் வரையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே இழுபறிகள் இருந்தபோதும் இதுவரை கூட்டுக்குலையாமல் கூட்டமைப்பு இருப்பது நின்மதி தரும் விடயம். எனினும் சம்பந்தரின் தீர்மானத்திற்கு எதிராக சத்தியப்பிரமாண நிகழ்வைப் புறக்கணித்த பங்காளிக்கட்சிகளின் தீர்மானம் கூட்டமைப்பின், எஞ்சியுள்ள இந்தக் கட்டுக்கோப்பையும் கலைத்துவிடுமோ என்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழர்களின் ஒன்றுபட்ட அரசியல் போராட்டத்திற்கு அத்திவாரமாக திகழவேண்டும் என்று மக்கள் அனைவரும் ஆணையிட்டிருக்கையில் சம்பந்தரின் தீர்மானம் தமிழர்களின் ஜனநாயக அரசியல் போராட்டத்திற்கு அ்தமனத்தை உருவாக்கிவிடக் கூடாது என்பதே கூட்டமைப்பிலுள்ள அனைவரிடமும் தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள்.

# அரசுடன் ஒத்துழைத்தல் உரிமைகளை நோக்கிய பயணமா?

வளவன்



வடமாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசார நிகழ்வில் "அரசாங்கத்தோடு ஒத்துழைத்துச் செயற்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாரென்றால் வடக்கின் அபிவிருத்தி, மேம்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க நாம் தயார்" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கான பதில் எனக் கருதத்தக்க விதத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவிப்பிரமாணத்தின் பின்னர் விடுத்த அறிக்கையில் "இனங்களுக்கிடையே எழுந்துள்ள சந்தேகங்களை அகற்றுவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. அதன் ஒரு அலகாகவே நாட்டின் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யத் தீர்மானித்தோம் என்றும் ஐக்கிய இலங்கைக்குள்ளேயே நாம் அரசியல் தீர்வொன்றை எதிர்பார்க்கின்றோம்" என்றும் தெரிவித்துள்ளார். முதலமைச்சரின் நம்பிக்கை அரசிற்கும் – குறிப்பாக ஜனாதிபதிக்கும் நம்பிக்கையளிப்பதாகவே நிச்சயம் இருக்கும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது அறிக்கையில் தூரநோக்கின் அடிப்படையிலும் குறுகியநோக்கின் அடிப்படையிலும் கடமையாற்றும்படி மக்கள் ஆணை வழங்கியுள்ளதாகவும், எமது தனித்துவத்தை வலியுறுத்தும் தூரநோக்கினை அடைய கடந்த காலப் போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள், அனுபவங்கள் யாவற்றிலிருந்தும் பாடங்களைக் கற்றே முன்னேற வேண்டியுள்ளது எனவும், குறுகிய நோக்கு என்பது போருக்குப் பின்னரான எமது மக்களின் தேவைகளைக் காலதாமதம் இன்றி பூர்த்திசெய்வது எனவும் குறிப்பிடுகின்றார்.

இதில் இரண்டு விடயங்கள் தமிழ்பேசும் மக்கள் பதில்காண முடியாத கேள்விகளை உருவாக்கியுள்ளது. ஒன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் என்பதற்கு ஜனாதிபதி கொண்டிருக்கும் அர்த்தம் என்ன? மற்றையது முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது போல தமிழ்மக்கள் வழங்கிய ஆணையின் குறுங்கால நோக்காக போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்பது அமையுமாயின் முதலமைச்சர் குறிப்பிடும் புரிந்துணர்வு என்பதன் அர்த்தம் என்ன?

1987இல் இந்தியா காணி, பொலிஸ் அதிகாரங்களடங்கிய - வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரு தீர்வைப் பரிந்துரை செய்து, 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பைப் பிரித்து விட்ட உயர்நீதிமன்றம், இப்போது 13ஆவது திருத்தச்சட்டத்தின்படி மாகாணசபைகளுக்கு காணி அதிகாரங்கள் கிடையாது என்றும் கைவிரித்து விட்டது. கொமின் தயாசிறி எனும் சிரேஷ்ட சட்டத்தரணி பொலிஸ் அதிகாரம் பற்றிய கூட்டமைப்பின் கோரிக்கைக்கும் சட்டமுறையான பதில் வழங்கப்படும் என்கிறார். இந்திய - இலங்கை உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைத் தீர்வு முறை, மிகவும் பலவீனப்படுத்தப்பட்டுள்ள ஒரு சூழலிலேயே, வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளையில் மாகாணசபைகளுக்கு முக்கியமான அதிகாரங்கள் எதையும் வழங்க முடியாது, என்ற இறுக்கமான நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது. வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னரே காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் தொடங்கி விட்டன. ஜனாதிபதி கூட காணி, பொலிஸ் அதிகாரங்களை யாரும் தன்னிடமிருந்து பிடுங்கிவிட முடியாது என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்திருந்தார். கூட்டமைப்பின் வட மாகாணசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் பிரச்சாரத்தினையும் நாட்டைப் பிரிப்பதற்கான நடவடிக்கையாகச் சித்திரித்து, அரசு பிரசாரம் செய்தது. இவ்வகையில் மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வு தொடர்பில் தமிழத்தேசியக் கூட்டமைப்புடன் இணங்க முடியாது என்ற அரசின் செய்தி தெளிவானது.

"இதில் இரண்டு விடயங்கள் தமிழ்பேசும் மக்கள் பதில்காண முடியாத கேள்விகளை உரு வாக்கியுள்ளது. ஒன்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் என்ப தற்கு ஜனாதிபதி கொண்டிருக்கும் அர்த்தம் என்ன? மற்றையது முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது போல தமிழ்மக்கள் வழங்கிய ஆணையின் குறுங்கால நோக்காக போருக்குப் பின்னரான அபி விருத்தி என்பது அமையுமாயின் முதலமைச்சர் குறிப்பிடும் புரிந்துணர்வு என்பதன் அர்த்தம் என்ன?"

இவை தவிர தமிழத்தேசியக் கூட்டமைப்புடன் ஒத்துழைக்க முடியாதென அரசு பகிரங்கப்படுத்திய வேறு பல விடங்களும் உண்டு. உள்நாட்டு விவகாரத்தை சர்வதேச மயப்படுத்துவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது அரசு குற்றம் சாட்டி வருகிறது. வடக்கில் அதிகளவிலான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள சூழலில் இராணுவத்தைக் குறைப்பது தொடர்பாக விக்னேஸ்வரனும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் விடுத்துள்ள கோரிக்கை குறித்தும் அரசின் நிலைப்பாடு இத்தகையதே. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்கிறது அரசாங்கம். மீண்டும் புலிகளின் கிளர்ச்சி ஏற்படவும் வாய்ப்பு கிடையாது என்கிறது. ஆனாலும் இராணுவத்தை குறைப்பதற்குத் தயாராக இல்லை. அத்துடன் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்இலங்கை அரசு மீதும் போர்க்குற்ற விசாரணைக்கு அழைப்பு விடுத்திருந்தது

இந்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல் என்பது மேற்படி விடயங்களில் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைக் கைவிட்டு அரசின் நிலைப்பாட்டுடன் பொருந்திப்போவது என்பதனைக் குறிக்குமாயின் அது ஜனாதிபதி கூட்டமைப்பின் வட மாகாணசபைத் தேர்தல் விஞ்ஞாபனத்தை மீளப்பெறக் கோருவதயே குறிக்கும்.

மறுபுறத்தில் இனங்களுக்கிடையே எழுந்துள்ள சந்தேகங்களை அகற்றுவதற்கான காலத்தின் தேவை கருதி ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யத் தீர்மானித்த விக்னேஸ்வரனின் புரிந்துணர்வு நல்லிணக்கத்துக்கான வழி எனவும் அதுவே இந்தியா உட்பட சர்வதேசத்தின் விருப்பம் எனவும் கருத்துருவாக்கம் செய்யப்படுகின்றது. உண்மை நிலைக்கும் இக்கருத்து நிலைக்கும் கணிசமான விலகலுண்டு.

இலங்கை இனப்பிரச்சினை இப்போது ஒரு சர்வதேச விவகாரமாக உருவாகியுள்ளது. நவிப்பிள்ளையின் இலங்கைப் பயணம், அவர் ஜெனிவாவில் சமர்ப்பித்த அறிக்கை, ஐ.நா பொதுச்சபைக் கூட்டம், வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் இவை அனைத்தும் இலங்கையை சர்வதேச மயப்படுத்தியுள்ள நிலையில் தமிழ் மக்களுடனான அதிகாரப்பகிர்வு தொடர்பில் அரசாங்கம் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இத்தகைய நிலையில் பொதுநலவாயம், ஐ.நா பொதுச்சபை, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை, முதலான சர்வதேச அரங்குகளில், இலங்கை தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

வட மாகாணசபைத் தேர்தல் மூலம், மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தி விட்டதாக காட்ட அரசாங்கம் முயன்றபோதிலும், இலங்கையில் போருக்குப் பிந்திய சூழலைப்போலவே, வட மாகாணசபைத் தேர்தலுக்குப் பிந்திய சூழலையும் உலகம் அவதானித்து வருகிறது. கடந்த நான்கு வருடகாலத்தில் மீளிணக்கத்திற்கான அரசின் கரிசனையை உலகம் புரிந்து

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் நாடக விழா

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் செயற்றி றன் அரங்க இயக்குனர் திரு.தே.தேவானந் அவர்களின் நெறி யாள்கையில் "கருப்பைதறுக்கணிப்பு" "வெப்பக்குடுவை""ஏழு பிள்ளை நல்லதங்காள்"எனும் நாடகங்கள் அண்மையில் மேடையேற்றப்பட்டிருந்தன. சமூகத்துக்குச் சொல்லப்பட வேண் டிய பல விடயங்கள் இந் நாடகங்கள் மூலம் பதிவுசெய்யப்பட்டி ருந்தன.



எமது மண்ணின் மகத்துவத்தைச் சிதைக்க முனையும் பல்வேறு அழுத்தங்களையும் அவற்றுக்கான பின்னணி களையும் மக்கள் மனதில் பதியவைக்கும் முயற்சிகளாக இந் நாடகங்கள் பலவும் அமைந்திருந்தன. அரங்கேற்றப்பட்ட அத்தனை நாடகங்களும் எமது சமூகத்தின் இன்றைய நிலையை எடுத்துக்காட்டும் சாட்சிகளாக அமைந்திருந்தன. பாத்திரங்களை ஏற்ற நாடக நடிகர்கள் தாம் பிரதிபலித்த பாத்திரங்களை சிறப்பாக ஆற்றுகை செய்தமை பலரின் பாராட்டையும் பெற்றிருந்தது.

மூத்த கலைஞர்களினால் தயாரிக்கப்பட்ட இந் நாடக நிகழ்வு பார்ப் போர் மனதில் இன்றைய சமூக யதார்த்த நிலைகளைச் சிந்திக் கத் தூண்டியிருக்கின்றது. இவ் அரங்க அளிக்கையில் மேடை யேற்றப்பட்ட "கருப்பைத்தறுக்கணிப்பு" "வெப்பக்கு டுவை" போன்ற நாடகங்கள் நமது தேசத்தின் மக்கள் மீது மறைமுக மாகத் திணிக்கப்படும் போலிமுகங்களை இனம் காட்டியது.


இலத்திரனியல் ஊடகங்களின் தவறான பாவனை, புட்டிப்பால் கலாசாரம், விளைநிலங்கள் கட்டிடமயமாதல், வெளி நாட்டு மோகம், ஏற்றுமதி பொருளான பெண்மை, விளைநி லங்களில் விதைக்கப்படும் நச்சு பசளைகளால் தாய்நிலம் மலட்டுத்தன்மை யாதல், மண்வாசனை மற்றும் இயற்கை மாசுபட்டதால் மனிதர் களே நோய் காவிகளாக மாறும் அவலம் என பல விடயங்களை உணர்த்தியமை பாராட்டத்தக்கது.

காணமல் போன உறவுகளைத் தேடியலையும் எம் தேசத்தின் நிலையை நவீன நல்லதங்காளின் மனவேதனைகள் ஊடாக வெளிக்காட்டியமையும், அவளின் உணர்வுகளை உணர மறுக் கும் சமூகத்தைக் கண்டித்தமையும் இந்நாடக ஆற்றுகையின் ஓர் சிறந்த முயற்சியாகும்.நாடகக் கலைவடிவம் உலகின் பல நாடுகளில் அரசின் அநீதி களை வெளிக்கொண்டு வந்ததுடன் சமூக நேசிப்புக் கொண்ட நாடகக் கலைஞர்கள் மக்கள் ஆதரவுடன் அரசாட்சிக்கு வரக் காரணமாயும் அமைந்தது என்பது வரலாறாகும். மாய உல கில் மூழ்கித் தவிக்கும் மக்களின் மனங்களைத் திறக்க நாடகம் சிறந்த ஓர் ஊடகம் என்பது மறுக்கப்படமுடியாத உண்மை யாகும். இதனை இவ்வரங்கும் உறுதிப்படுத்தியிருந்தது.

இருந்தும் நாடககலைஞர்கள் பலர் உள்ள எம் நாட்டில் நாடகக் கலை அரங்குக்கு அதிகம் வராமல் அருகி போவதற்குக் காரணம் என்ன? ரசிகர்களின் ரசனைமாற்றங்கல் குறித்த நாடகக் கலைஞர்களின் தேடலின்மையா? அல்லது வாழ்வியலில் கலைநுகர்வில் ஏற்பட்ட மாற்றங்களா? என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

நாடகம் அரங்கியல் துறை பல்கலைக்கழகங்களில் இன்று பெரு வளர்ச்சி அடைந்து பட்டப்படிப்பான போதும் இதனைக் கற்போரில் எத்தனைப் பேர் அரங்கை பயன்படுத்தி உள்ள னர்? எத்தனை பேர் ஆக்கபூர்வமான படைப்புக்களையும் நாடகங்களையும் உருவாக்கி உள்ளனர்? நாடகத்தை கற் கும் மாணவர்களுள் எத்தனை பேர் ஆற்றுகைகளுடாக ஆகக்குறைந்து பார்வையா ளர்களுக்குரிய அனுபத்தை தானும் பெற்றுக்கொள்கின்றார்கள்? இவ்வாறான மாற்றப்பட வேண்டிய காரணிகளினால் எதிர்கால நாடக உலகு இருண்ட வெளியாகவே காணப்படுகிறது. இதை மாற்றப் பொறுப்புள்ளோர் வழி காண்பது அவசியமானது.

பாமரமக்கள் முதல் படித்தோர் வரை தமது ரசனையை வெளிப் படுத்தவும், திறன் உள்ளோரின் ஆற்றலுக்கு களம் அமைக்கவும் புதிய சிந்தனைகளால் மக்களை வழிப்படுத்தவும் நாடகக் கலை யைப் பயன்படுத்தவேண்டிய காலத்தேவை இன்றுள்ளது. பாடசா லைகளின் திறன் வாய்ந்த நாடக ஆசிரியர்கள், பல்கலைக்கழகங்



கள்சார் நாடகத்துறை திறமைசாலிகள் என உரியவர்கள் முன்வந்தால் ஒன்றிணைந்து நாடக உலகு மூலம் மக்களின் நல்வாழ்வைக் கட்டியெழுப்பி நல் லாட்சியையும் மலரவைக்கலாம் இதற்கு முன்னுதாரணமாக அமைந்த இவ் நாடக ஆற்றுகையையும் அதற்கு காரணமான தேவானந்தையும் பாராட்டுவது அவசியமானதாகும். **- யோகி -**

## சரியா? தவறா?

கூட்டமைப்பின் தற்போதைய செயற்பாடுகள் பெருமளவில் வாக்களித்த மக்களை முட்டாள்களாக்கும் விதத்தில் அமைகி றது. ஐந்து கட்சிகளின் கூட்டு இப்போது நான்காகியிருக்கிறது. வீரவசனம் பேசி மக்களிடம் பெற்ற வாக்குகளை இப்போது குழிதோண்டிப் புதைப்பதுபோல அமைச்சுப் பதவிக்காக விண் ணப்பம் கோரப்படும் நிலை உருவாகியது. இது ஒரு அனுப வம் வாய்ந்த தலைவரின் கருத்தாக இருந்ததும் வேதனை அளிக்கிறது. தற்போது தான் மறைந்த தலைவர்களின் தீர்க்க மான முடிவெடுக்கும் தன்மை உணரப்படுகிறது. அமரர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம், ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் பலர் இன்று இல்லாத வெற்றிடம் உண ரப்படுகிறது. வெற்றிபெற்ற 28 உறுப்பினர்களில் 20க்கும் மேற்பட்டோர் தமக்கு அமைச்சர் பதவி வேண்டும் என உடும் புப்பிடி பிடித்தமை கவலை தருகிறது. ஒரு போனஸ் ஆச னத்தை 5 வருடங்கள் பங்கிடுவதுபோல அமைச்சுப் பதவிக ளையும் வருடம் ஒரு தடவை ஒருவருக்கு என்று பகிர்வது தான் இப்போதுள்ள பதவிமோகம் பிடித்தவர்களுக்கு சரியான தாக அமையும். எந்தவிதமான கட்டமைப்புமின்றி கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் சுயநலத்தை மக்கள் அடியோடு வெறுக்கும் நிலைக்கு ஆளாகாமல் உருப்படியான நீதியான தீர்வை எட்ட முற்படுங்கள். தேர்தலுக்கு முன்னர் முதன்மை வேட்பாளரின் இழுபறிப்பட்டீர்கள். பல வாதப் பிரதிவாதங்களின் பின்னர் அதில் ஒரு முடிவு காணப்பட்டது. அதன்பின் போட்டியிடும் வேட்பாளர் நியமனத்தில் தொடர்ந்து 4 – 5 நாட்கள் இழுபறிப் பட்டு ஓரளவு திருப்தியான முடிவெடுத்தீர்கள். அண்மையில் 4 அமைச்சுப் பதவிகளுக்கு மீண்டும் கூடிப் பேசி முடிவெடுக்க பட்டசிரமம் கூட்டமைப்பு மீது மக்களும் சர்வதேசமும் கொண்டி ருந்த நம்பிக்கையை வலுவிழக்கச் செய்கிறது. சர்வதேசம்



சர்வதேசம் எனப் புலம்பிப் பெற்ற வெற்றியை உலகத்தவர்கள் ஏளனம் செய்யுமளவிற்கு விட்டுவிடாதீர்கள்! காந்தி பிறந்த நாளில் உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டாலும் - ஈழத்துக் காந்தி பெரியவர் தந்தை செல்வாவின் பெயரைச் சொல்லி வெற்றிபெற்றவர்க ளின் நடவடிக்கை கேவலமாக இருக்கிறது. இதுவரை தந்தை செல்வாவின் சமாதிக்குச் செல்லாதவர்களா மக்களின் தேவை களைப் பூர்த்தி செய்யப் போகின்றார்கள்? ஜனாதிபதியின் முன்பாகவோ ஆளுனர் முன்பாகவோ பதவிப் பிரமாணம் செய்யாமல் தந்தை செல்வா சமாதியில் ஒரு நீதிபதியின் முன் பாக பதவிப் பிரமாணம் செய்திருக்கவேண்டும்! தேர்தல் மேடைகளில் அரசை விமர்சித்தபின் அவர்கள் முன் உறுதியெ டுப்பது வாக்களித்த மக்களை விற்பது போலாகும் என்பதே எனது கருத்து! இதைவிட பேசாமல் மாகாண சபையிலிருந்து ஒதுங்குவது மேல்!

**தங்க முகுந்தன்**, முன்னாள் மாநகர சபை உறுப்பினர்,
[illegible]

# முல்லைக்கு பெருமை சேர்த்த மு/விசுவநாதர் வித்தியாலயம்



**கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதல் 11 இடங்களைப் பெற்ற மு/விசுவநாதர் ஆரம்ப வித்தியாலய ஆசிரியர் திரு.ப.சுதர்சன் அவர்களுடனான நேர்காணல்**

### வெற்றி குறித்து தங்களுடைய மன உணர்வு எப்படி இருக்கிறது?

மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஏனெனில் முல்லைத் தீவு மாவட்டத்தில் முதல் 11 இடங்களையும் எனது மாணவர்களே பெற்றுள்ளனர். அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக அளவு மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலையாக எனது பாட சாலையான மு/ விசுவநாதர் ஆரம்ப வித்தியாலம் நிகழ்கிறது.

### போர் நெருக்கடி வளப்பற்றாக்குறை மத்தியில் இவ்வாறான வெற்றியை எவ்வாறு பெறமுடிந்தது?

போரினாலே பாதிக்கப்பட்ட மாணவர்களே எனது வகுப் பறையில் அதிகமாக இருந்தார்கள்.இருந்தபோதிலும் அம்மாண வர்களின் ஊக்கம் பெற்றோர்களின் பங்களிப்பு என்னை உந்து சக்தியாக விளங்கியது.எனது பாடசாலை 2013.01.01ல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆகும். போதியளவு வளங்கள் இல் லாத போதிலும் எனது அதிபர், பெற்றோர்களின் பங்களிப்போடு இந்த வெற்றியைப் பெற்றேன்.

### தங்கள் கடின முயற்சிக்கான ஆதரவு தளம் போது மானதாக இருந்ததா?

ஆம், அதிபர் எனது வெற்றிக்கு பெரும் ஆதரவாக தோளோடு தோள் நின்றார். அத்தோடு பெற்றோர்களையும் தமது தம்மை முழு ஆதரவினைத் தந்தார்கள் அத்தோடு எமது சக ஆசிரியர்களும் எனக்கு வழிகாட்டியாக இருந்தார்கள். இதனா லேயே இவ் வெற்றியை பெற முடிந்தது. எமது பாடசாலைக்கென எந்தவொரு நிரந்தரக் கட்டிடங்களும் இல்லாத நிலையிலும் விசுவ மடு மகாவித்தியாலய கட்டிடத்தின் கீழ் எளிமையான முறையில் எனது கற்றல் கற்பித்தலை மேற்கொண்டேன்.

### தங்களோடு இணைந்து இவ்வெற்றியின் பங்களி களாக யார் இருந்தார்கள்?

எனது வெற்றிக்கு என்னை இச் செயற்பாட்டிற்கு முற்று முழுதாக ஈடுபடச் செய்த எனது தாய், மனைவி, பிள்ளைகளுக்கு முதற்கண் நன்றியைக் கூறுகின்றேன்.அத்தோடு எமது பாட சாலை அதிபர் என்னை திறந்த வெளியில் கழற்றி விட்ட பந்து போல் தடைகள் ஏதுமின்றிச் சுதந்திரமாக செயற்படவிட்டார். அத் தோடு சக ஆசிரியர்களும் எனக்குப் பூரண ஆதரவை வழங்கினர் கள். ஓய்வு பெற்ற எமது பகுதித் தலைவர் திருமதி.S சதானந்தன் அவர்களும் தாய் போல் இருந்து எமக்கு முழு ஆதரவினை வழங் கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தங்களைப் போன்று வெற்றியாசிரியர்களாக மிளிர வேண்டும் என நினைக்கும் ஆசான்களுக்கு தாங் கள் கூறவேண்டியது என்ன?

முயற்சியும் பயிற்சியுமே ஒரு ஆசானுக்கு இருக்க வேண்டியதாகும். எனது மாவட்டத்தில் முதல் 11 இடங்களையும் பெற்ற மாணவர்களுள் இரு மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் சாதாரண கூலி வேலை செய்யும் பெற்றோர்களின் பிள்ளைகள்.குறிப்பாக முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி கூட சாதாரண கூலி வேலை செய்யும் பெற்றோரின் பிள்ளையே ஆவார்.எனவே பிள்ளைகளின் பரம்பரைகளை வைத்து எடை போடாது அவர்களின் ஆளுமை ஆற்றல்களை இனங்கண்டு நீண்ட பயிற்சிகளை வழங்கி எந்த மாணவனையும் வெற்றி பெறச் செய்யலாம் என்பதே எனது முடிவு.

**செவ்வி: ஞானசொரூபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook Search Home

Write Post | Add Photo / Video | Ask Question

## தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் தலைமையை துறந்தார் ஆசிரியர் வரதர் முகநூல் வாயிலாக பகிரங்க அறிவிப்பு......

*கடந்த வார தொடர்ச்சி....*



**Paraபரன்**

இனவழிப்புக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று மக்கள் ஆணை !!! கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'இன அழிப்பு' என்றவொரு சொல் எங்காவது காணப்படுகிறதா என்பதை உங்களால் கூறமுடியுமா? ஆங்கிலத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் "Genocide" என்ற சொல்லைக் காணவில்லையே? மக்கள் இதற்கு ஆணைகொடுத்துள்ளார்கள் என எப்படி கூட்டமைப்புக் கூறமுடியும்? Ratnasingam Sharveswara அண்ணா, ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும்..கடந்த காலங்களில் சம்பந்தன் தலைமை தமிழ் மக்களின் நலனிலும் பார்க்க பிறசக்திகளின் நலனுக்காக செயற்படுகிறதென்கின்ற ஐயம் வெகுவாக வலுப்பெற்றிருந்தது. த.தே.ம.மு. இன் ஒவ்வொரு அறிக்கைகளும் நகர்வுகளும் தான் த.தே.கூ. இன் அறிக்கைகளிலும் செயற்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த செய்தது. அதற்காகவாவது த.தே.ம.மு. தமிழ் அரசியற் சூழல் இன்றியமையாதது..

இன்னும், தந்திரமாக தில்லுமுல்லுகளை செய்யும் ஆற்றல் (அரசியல் சாணக்கியம்..?) உதயன், தமிழ்வின்களை தன்னகத்தே கொண்ட த.தே.கூ. விற்கு உண்டென்பதை மாயையில் சிக்கியுள்ள தமிழ்மக்கள் உணர வேண்டியுள்ளது தங்கள் போன்றோர் உணர்த்தவும் வேண்டியுள்ளது.

இன்னும் இனவழிப்பு என்ற வார்த்தையை ஐ.நா போன்றே த.தே.கூ. வினரும் தவிர்ப்பது இந்தியாவிற்கு வலித்துவிடுமென்பதற்காகவா, அல்லது இனவழிப்பு நடக்கவில்லை என்பதாலா அல்லது அந்த வார்த்தை தேவையற்றது என்பதாலா??????

Like | Comment | Share



**Varatharajan Sinnathurai**

தம்பி சர்வேஸ்வரா, 2010ம் ஆண்டுத் தேர்தலில் நான் பங்குபற்றியதன் பின்னணியை இச் சந்தர்ப்பத்தில் விளக்குவது பல சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் என நம்புகின்றேன். 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலோடு தமிழரின் உரிமைப் போராட்டத்தின் ஒரு வடிவம் முடிவிற்க வந்தது. இந்நிலையில் அடுத்து என்ன செய்வது என்றவொரு வினா என் மனதில் எழுந்தது. எனது மாணவர்கள் பலர் தேர்தல் அரசிலில் ஈடுபடுமாறு எனக்கு ஆலோசனை கூறினார்கள். எனக்கும் அது சரியானது போலவே தோன்றியது. பலர் கூட்டமைப்பில் இணையுமாறு ஆலோசனை கூறினர். ஆனால் அப்போது அதில் உடன்பாடு இருக்கவில்லை. ஏனெனில் யுத்தம் முடிந்தவுடன் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கைகளும் கருத்துக்களும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளும் எனது மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்று என்னை விமர்சனம் செய்பவர்கள் 2009 மே 19க்குப் பின்னர் வெளிவந்த இரண்டு மாத பத்திரிகைகளை வாசித்துப் பாாத்தால் நான் சொல்வதன் அர்த்தம் விளங்கும்.

கூட்டமைப்பு தமிழ் மக்களை தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப் போகின்றதோ என்றவொரு பயம் எனது மனதில் தோன்றியது. எனவே கூட்டமைப்பிற்கு ஒரு பலமான எதிர்க்கட்சி உருவாகுவதன் மூலம் சரியான பாதையில் தமிழரின் அரசியல் போராட்டம் செல்லும் என நம்பினேன். இவை எல்லாம் எனது தனிப்பட்ட சிந்தனைகளும் கருத்துக்களும் மட்டுமே. இக் காலகட்டத்தில் கஜேந்திரகுமார் மற்றும் குஜேந்திரன் போன்றோரோடு எதுவித தொடர்பும் எனக்கு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 2010ம் ஆண்டுத் தேர்தல் அறிவிப்பு வெளியாகியது. நான் அப்போது கொழும்பில் இருக்கின்றேன். ஒரு நாள் அன்றைய யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியச் செயலாளரிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. தேர்தல் தொடர்பாக என்னோடு பேச வேண்டும் எனவே யாழ்ப்பாணம் வரமுடியுமா என்று கேட்டார். அப்போது நான், வகுப்பு எடுப்பதற்கு யாழ்ப்பாணம் வரும்போத சந்திக்கலாம் என்று சொன்னேன். அதன்படி அவர்கள் வந்து என்னை சந்தித்தார்கள். அவர்கள் பின்வரும் விடயங்களை எனக்கு கூறினார்கள். இத் தேர்தலில் கூட்டமைப்பு ஒரு ஆசனத்தை தங்களுக்கு ஒதுக்கியுள்ளது. நாங்கள் ஒரு மாணவரின் பெயரை சிபாரிசு செய்தோம். ஆனால் அவரைக் கூட்டமைப்பு ஏற்கவில்லை வேறு ஒருவரைத் தரும்படி கேட்கின்றார்கள். நாங்கள் உங்களைத்தான அந்த இடத்திற்குப் போடப் போகின்றோம் நீங்கள் சம்மதிக்கவேண்டும் என்னிடம் கூறினார்கள். அப்போது நான் எனது கருத்துக்களை அதாவது கூட்டமைப்பு தமிழ் மக்களை தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப் போகின்றதோ என்றவொரு பயம் எனக்கு இருப்பதாகக் கூறினேன். அதற்கு அவர்கள் நீங்கள் கூட்டமைப்பிற்குள் வந்து அவர்களைத் திருத்தலாம் தானே என்று கூறினார்கள். நான் அரசியலுக்குப் புதியவன் எனவே எனது கருத்துக்களை அவர்கள் ஏற்பார்கள் என்பது கற்பனை. இப்போது பதவிக்காக உங்கள் கோரிக்கையை ஏற்று உள்ளே வந்து பின்னர் அவர்களோடு முரண்பட்டு வெளியே வந்தால் கூடட்மைப்பை உடைக்கின்றேன் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாவேன். எனவே வேண்டாம் என்று கூறிவிட்டேன். நான் விரும்பியிருந்தால் அன்று மாணவ ஒன்றியத்தின் கோரிக்கையை ஏற்று கூட்டமைப்பு சார்பில் தேர்தலில் போட்டியிட்டிருக்கலாம். பல்கலைக்கழக மாணவர்களின் முழு ஆதரவோடு அதிகூடிய விருப்ப வாக்குகளைப் பெற்று இன்று பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பேன். வேறு யாராக இருந்திருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தை விட்டிருக்கமாட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் முறிந்து வீழ்ந்தாலும் வீழ்வேனே ஒழிய பதவிக்காவும் சலுகைகளுக்காவும் வளைந்து கொடுக்க மாட்டேன். இது எனது சுபாவம். இதுதான் அன்று நடந்தது. இதன் உண்மைத்தன்மையை அறியவேண்டுமாயின் அன்றைய மாணவ ஒன்றியச் செயலாளர் திரு. ரங்கன் அவர்களோடு தொடர்பு கொள்ளலாம். பின்னர் நான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு சேர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது வேறு ஒரு கதை. அது இது இவ்விடத்தில் தேவையில்லை என்ற நினைக்கின்றேன்.

Like | Comment | Share



**Markandu Kandia**

இது ஒன்றும் புதிரான விடயம் இல்லை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் தெரிவித்து வரும் முன்னுக்குபின் முரணான கருத்து களை பார்க்கும்போது அவர்கள் நேர்மையாக இல்லை என்பதை உணரலாம் . கதிரைகள் நிரப்படுகிறது அவ்வளவே இவர்கள் எதையும் செய்ய விரும்பவுமில்லை ...செய்யவும் முடியாது .

Like | Comment | Share



**Ratnasingam Sharveswara**

தம்பி குரு தாங்கள் ஒரு விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும். இம் முறை கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட வாக்குகள் மாகாண சபைக்கான அங்கீகாரம் அல்ல என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஒரு தனிமனித ஆளுமை தந்த நம்பிக்கை கவர்ச்சி பலரை வாக்களிக்க தூண்டியிருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தல்களில் கூட வாக்களிக்காத பல படித்தவர்கள் இம் முறை பார்த்திருந்து வாக்களித்துள்ளார்கள். எனவே இது கூட்டமைப்புக்கான ஆதரவுத்தளம் என்பதற்கு அப்பால் தனி மனித ஆளுமைக்கான ஆராதிப்பும் அவ் ஆளுமை விழைவித்த விழிப்புணர்வும் எனலாம். ஒரு வேளை மாவை முதலமைச்சர் வேட்பாளராக விருந்திருந் தால் இந்த எழுச்சி ஏற்பட்டிருக்குமா என்பது கேள்விக் குறியே. உங்கள் உள்ளத்தை தொட்டுச் சொல்லுங்கள் உங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக (அதாவது மாகாண சபை முறைமை தொடர்பில்) இருந்தும் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்த நீங்கள் தேடிய வார்த்தைகளில் அந்த தனிமனித ஆளுமையின் பாதிப்பு இருக்கவில்லையா? நடந்து முடிந்த தேர்தல் எல்லோரும் சொல்வது போல கூட்டமைப்புக்கான அல்ல என்பதை உடன் படுகின்றேன். மாகாண சபைக்கானது அல்ல என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். தமிழர் ஒற்றுமைக்கானது என ஏற்றுக்கொண்டால் கடந்த தேர்தல்களில் இவ் ஒற்றுமை கருதி எழுச்சி ஏன் ஏற்பட்டிருக்கவில்லை. குரு இதனை விளக்க வேண்டும். இரண்டாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முண்ணணி என்னை அணுகியபோது எனது அரசியல் அறிவு மட்டம் சார்ந்து போதைமையை உணர்ந்தேன். புயலுக்குபின் மெதுவாக அமைதிக்கு திரும்பிக் கொண் டிருந்த எனது வாழ்வை அனுபவித்துப் பார்க்க ஆசைப் பட்டேன். அதற்கு மேலாக ஆளுமை உள்ளவர்கள் அரசியல் களத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரண்டு விரிவுரையாளர்கள் சகிதம் உங்களை அணுகியது உண்மை. அப் போது தாங்கள் too early என மறுத்த போது ஏற்றுக் கொண்டு பின்னர் மணிவண்ணண் களத்தில் இறங்கினார் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில். அன்றைய நிலை முடிவெடுப்பதில் பலரும் சங் கடப்பட்ட நிலை. அவர் சொல்லும் போது அவர் சொல்வது சரியாகவும் இவர் சொல்லும் போது இவர் சொல்வது சரியாகவும் தெரிந்த நிலை. மனம் காயப் பட்டுக் கிடந்தது. சிலர் கடைசி நேரத்தில் தலைவர் தங்களிடம் இதைச் சொன்னார் என்று கதையளந்த போதும் நம்பக்கூடியதாகவிருந்தது. கூட்டமைப்பின் ஆசனத்தை வீணாக இழந்த ரங்கனுக்கு எனக்கிருந்த பொறுப்புணர்வில் சில கருத்துக்களை கூறி விளக்க முயன்றேன். முடியாது போய்விட்டது. அதன் பாதிப்பு இன்றுவரை தொடர் கின்றது.

Like | Comment | Share

**Theepan Santhan** தமிழ் சிவில் சமூகத்தின் மீது அல்லது வேறு எவர் மீதும் சேறு பூசுவது அவசியம் இல்லாத விடயம்.. இங்கே புலம் பெயர் சமூகம் தமிழ் தேசிய முன்னணி தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் சிவில் சமூகம் ஒன்று இணைந்து தமிழ் மக்கள் நலம் வேண்டி ஒரு புள்ளியில் இணைய வேண்டிய அவசியம் ..மக்களின் விருப்பு தெளிவா னது.. இங்கே சொல்லுக்கு முன் செயல் மிக அவசியம்,,அது ஒன்றே விடுதலைக்கு வழி .. இங்கே தமிழ் மக்கள் அரசியல் தளத்திலும் பொருண்மிய தளத்திலும் தங்கி இருக்கும் நிலையில் இருந்து உயர்வு பெற வேண்டும். தலைவர் அவர் கள் சொன்னது போல ஒரு சமூகத்தின் விடுதலை என்பது அரசியல் பொருண்மிய என எல்லா மட்டங்களிலும் நிகழ வேண்டும். புலம்பெயர் சமூக ஆதரவுடன் ஒரு பொருண்மிய முறை கட்டி எழுப்பப்பட வேண்டும்.இது மக்களின் அனுதின பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும். கூட்டமைப்பு இந்தியா வில் தங்கி இருப்பதை தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். சரியான தெளிவான அரசியல் தீர்வு திட்டம் ஒன்று வரையப் பட்டு மக்கள் முன் கொண்டு செல்லப்படவேண்டும் ..

தேர்தலை பொருத்தவரை வெறுமனே தனி மனித அடையலாம் என்பதற்கு அப்பால் பல காரணங்கள் மக்கள் எழுச்சிக்கு காரணமாக இருந்தன. குறிப்பாக சிங்கள அரசின் இனவாதம் புலிகள் தொடர்பிலான வேட்பாளர்களின் கருத்துக்கள் ஊடகங்கள் எழுப்பிய விவாதங்கள் என பல விடயங்களைப் பேசலாம். ஆனால் அவை இப்போது அவசியமில்லை.

அடுத்த கட்டம் மிக முக்கியம். ஒன்றிணைந்து பயணிப்பதே எல்லாவற்றுக்கும் அடிப்படை

Like | Comment | Share

*(விவாதம் தொடரும்..)*

## சரியா? தவறா?



கூட்டமைப்பின் தலைமையின் ஒருதலைப்பட்ச முடிவின்படி எமது முதலமைச்சர் சனாதிபதி முன்னிலையில் பதவி ஏற்றமை சரியான ஒரு முடிவாக படவில்லை. வாக்களித்த நாம் அரசுக்கு எதிரான ஒரு மனநிலையில் தான் இருந்தோம். அந்நிலையில் இவ்வறான அவசியமற்ற இணக்க அரசியலை செய்ய வேண்டிய தேவை இல்லை. சத்தியப்பிரமாணத்தின் போது குறிப்பாக ஆளுனரும் உடனிருந்தார் என்பது ஒரு தோல்வி உணர்வை தருகிறது. மற்றப்படி நாட்டின் தலைவர் என்ற ரீதியில் அவரின் முன் பதவி ஏற்பது மாகாணசபை முதலமைச்சர் செய்யக்கூடாத ஒன்றல்ல என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். அவர் கூடாதவர் நீங்கள் அவருக்கு அடிபணியக்கூடாது என்று கூறிவிட்டு சொன்னவர் அடிபணிந்தால் அவர் சொல்லில் ஈர்க்கப்பட்டிருந்தவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படுகின்ற ஒரு நிலைக்கு இது ஒப்பானது. ஆரம்பத்திலேயே இது தான் முடிவு என்று சொல்லியிருந்தால் மக்களின் இந்த கருத்தலைகளை குறைத்திருக்கலாம் என்பது என் வாதம். இது கூட்டமைப்பின் இணக்க அரசியல் குறித்து நாம் விழிப்புடன் இருப்பதற்கான ஒரு உந்துதலை எமக்கு ஏற்படுத்தியிருக்கிறது

**- தங்கராஜா தவரூபன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனின் வருகை

# அரசனின் வருகை

மூடுண்ட அந்த நகரத்துக்கு அரசன் வரும் நாள் அண மித்துக் கொண்டிருந்தது. யுத்தத்தில் இடிந்து போன கோயிலைக் கட்டும் பணிகளை ஆரம்பித்து வைக்க அவன் வருவதாகச் சொன்னார்கள். அரசனின் வருகை பற்றிய அறிவிப்புகளை உடம் பில் ஒட்டிக் கொண்டு எருமைகள் எல்லாம் நகரத்து வீதிகளில் அலைந்து திரிந்தன. முரசுகள் சந்து பொந்துகளெங்கும் சென்று அதிர்ந்தன.

ஆற்றின் கரையில் அந்த நகரம் இருந்தது. சிறு காற்றுக்கு உரசி, தீப்பற்றி எங்கும் மூளும் மூங்கில்கள் நிறைந்த நகரம் அது. கடைசி யுத்தம் மூன்று வருஷங்களின் முன்னால் நடந்தது. யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, வாட்கள் ஒன்றோடொன்று உரசுமொலி, மனிதர்களின் அவலக் குரல் எல்லாம் இன்றைக்கும் செவிகளில் குடியிருந்தன. அப்போதைய பிணங்களின் எரிந்த வாடை இன்னமும் அகலா மல் நகரத்தின் வானத்தில் தேங்கிப் போய் நின்றது. அண்மைக் காடுகளை உதறி விட்டுப் பிணந்தின்பதற்காக இங்கே வந்த பட்சி கள் யாவும் பெரிய விருட்சங்களில் தங்கி இன்னொரு தருணத் திற்காக ஏங்கிக் கொண்டிருந்தன, கூரையிழந்த வீடுகள், கரி படிந்த சுவர்கள் அந்நகர் தன் அழகு முகத்தின் மூக்கை இழந்த விதம் சொல்லும். ஆந்தைகளின் இடைவிடாத அலறல்களுடன், நாய்களின் அவ்வப்போதைய ஊளைகளுடனும் நகரத்தின் இரவுகள் கழிகின்றன. முகிலுக்குள் பதுங்கிக் கொண்ட நிலவு வெளியே வருவதில்லை. பால் கேட்டுக் குழந்தைகள் அழ வில்லை. நடு இரவில் குதிரைகளின் குளம்பொலிக ளும் சிப்பாய் களின் சிரிப்பொலிகளும் விட்டு விட்டுக் கேட்கும். நெஞ்சறை காய்ந்து, செவிகள் நீண்டு, கூரையில் கண்களைப் புதைத்து பாயில் கிடப்பான் ஊமையன்.

ஊமையனும் இன்னும் சிலரும் அந்த நகரத்தில் எஞ் சியிருந்தனர். உயிர் தப்பிய சிலரும், உயிர் தப்பப் பலரும் ஆற் றைக் கடந்து வேறு பகுதிகளுக்குச் சென்றார்கள். கரையில் நின்று கையசைத்த பெண்களின் கண்களில் துளிர்த்த நீரில் அந்தப் படகுகள் மறைந்து போயின. ஊமையனுக்கு அம்மாவை விட்டுப் போக மனமில்லை. ஊமையனின் உண்மையான பெயர் பலருக்கு மறந்து போய்விட்டது. அதிகம் எதுவும் பேசாத தால் அவனுக்கு அந்தப் பெயர் வந்தது. அவன் பேச்சு எவ்விதம் மெல்ல மெல்லக் குறைந்தது என்பது பற்றி அம்மா அறிவாள்.

கலகக்காரர்களை ஒடுக்க இந்த நகரத்துக்கு அரசன் அனுப்பிய படையுடன் கூடவே ஆயிரமாயிரம் பிணந்தின்னிக் கழுகுகளும் தம் சிறகுகளால் சூரியனை மறைத்தபடி இங்கே நுழைந்தன. கோயிலின் சிலை, பெண்களின் முலை, குழந்தை களின் தலை என்ற வெறியாட்டம். மத யானைகள் துவம்சம் செய்த கரும்புத் தோட்டமாயிற்று, அந்நாட்களில் இந்த நகரம். ஊமையனும் ஒரு நாள் பிடிபட்டவன்தான். முகத்து மயிரை மழிக்க அவன் வைத்திருந்த சவரக்கத்தி கூட ஓர் ஆயுதம் எனக் குற்றஞ் சாட்டி, அவனுடைய கைகளைப் பின்புறம் கட்டி, பாதணி கள் இல்லாத அவனைக் கொதி மணலில் அழைத்துச் சென்றனர், நடு வெயிலில் நடுத்தெருவில் முழங்காலில் நிற்க வைத்து சூரிய நமஸ்காரம் பண்ணச் சொன்னார்கள். வாயில் கல்லைத் திணித்து, வயிற்றில் குத்தினார்கள். 'அம்மா' என்ற அவனுடைய சத்தம் கல்லைத் தாண்டி வெளியே வரவில்லை.

மாலையில், வெறிச்சோடிய தெரு வழியாகத் தளர்ந்த நடையும், வெளிறிய முகமுமாக ஊமையனும் இன்னும் சிலரும் நகரத்துக்குத் திரும்பி வந்தனர். மரணத்தின் தூதுவன் மறுபடி யும் கைதட்டிக் கூப்பிடுவான் என்ற அச்சத்தில் திரும்பிப் பாராமல் நிழல்கள் இழுபடத் தள்ளாடித் தள்ளாடி அவர்கள் வந்தனர். தெருமுனையில் அவர்கள் தோன்றியதும் பெண்கள் ஓட்டமும் நடையுமாக அவர்களிடம் வந்தனர். ஓடி ஓடி ஒவ்வொரு முகமாகத் தேடி அலைந்தனர். வராத முகங்கள் தந்த பதற்றத்தில் நடுங்கி னார்கள். ஒப்பாரி வைத்து அழுதார்கள். 'என்ன நடந்தது, என்ன நடந்தது' என்று ஓலமிட்டார்கள். தனதப்பன் போய்ச் சேர்ந்து விட் டான் என்ற சேதி தெரியாமல் ஒருத்தியின் இடுப்பிலிருந்த குழந்தை விரல் சூப்பிச் சிரிக்கின்றது. 'என்ன நடந்தது, என்ன நடந்தது' என்று இன்னொருத்தி ஊமையனின் தோளைப் போட்டு உலுக்கி ஒப்பாரி வைக்கின்றாள். பேய்க் காற்றின் உரச லில் கன்னியர் மாடத்தின் சவுக்கு மரங்கள் இன்னும் துயரத்தின் பாடல்களைப் பரப்புகின்றன.

வாழ்வதற்கான வரமும், அதிர்ஷ்டமும் தனக்கிருப்ப தாக எண்ணி ஒரு சிறு கணம் உள்ளம் துள்ளிய சிறு பிள்ளைத் தனத்துக்காக வெட்கப்பட்ட ஊமையன் தன் தலை மேல் கத்தி தொங்கும் வாழ்க்கை விதிக்கப்பட்டிருப்பதை மெல்ல உணர்ந் தான். மௌனத்தில் அவன் காலம் நகர்ந்தது. வீட்டுக்குள் முடங் கிய அவனை நான்கு சுவர்களும் நெரித்தன வீட்டின் கூரை பல சமயங்களில் நெஞ்சில் இறங்கிற்று. ஒளியைத் தவறவிட்ட தாவரம் போல ஊமையன் வெளிறிப் போயிருந்தான். தேவாங் கின் மிரட்சியுடன் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பகலிலும் இரவிலும் கனவுகளில் அலைந்தான். கண் கள் தோண்டப்பட்ட, நகங்கள் பிடுங்கப்பட்ட மனிதர்கள் 'எங்களுக கோர் நீதி சொல்' என்று தள்ளாடித் தள்ளாடி அங்கே வந்தனர். அரைகுறையாக எரிந்த தெருச் சடலங்கள் வளைந்தெழுந்து 'நாங்கள் என்ன குற்றம் செய்தோம்' என்று முனகியன. நீர் அள்ள உள்ளே இறங்கிய வாளியைக் கிணற்றுள் கிடந்த பிணங்களி லிருந்து கையொன்று மெல்லப் பற்றிக் கொண்டது. கழுத்தை இழந்த கோழியொன்று துடிதுடித்து உயிரைத்தேடி அங்குமிங் கும் அலைந்து மண்ணில் சாயும். குட்டித் தாய்ச்சி ஆட்டின் வயிறு மீது குதிரை வண்டிச் சக்கரங்கள் ஏறிச் செல்லும். மயிர் உதிர்ந்த தெரு நாய்களின் வாய்கள் மனிதர்களின் கையையோ காலை யோ கவ்வி இருக்கும்.

ஊமையனின் கனவில் அரசனும் வந்திருக்கின்றான். சாந்த சொரூபனாய், கடைவாய் கெழிந்த புன்னகையுடன் அந்தக் கனவில் அவன் வந்தான். கடைவாய் கெழிந்த இந்தப் புன்ன கைக்குப் பின்னால் முதலைகள் நிறைந்த அகழியும், நச்சுப் பாம்



புகள் பதுங்கிக் கொண்ட புற்றொன்றும், விஷ விருட்சங்களைக் கொண்ட வனாந்தரமும் ஒளிந்திருப்பதாகப் பலர் பேசிக் கொண்ட னர். இதைப் போல் அரசனைப் பற்றிப் பல கதைகள். வெண் புறாக்களை வளர்ப்பதில் அவன் பிரியம் கொண்டவன் என்றும், மண்டையோடுகளை மாலையாக்கி அணிவதில் மோகமுள்ள வன் என்றும் ஒன்றுக்கொன்று முரணான கதைகள். பல நூற் றாண்டுகள் மண்ணுக்குள் யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த தன் முன்னோரின் கிரீடத்தைக் கண்டெடுத்துத் தலையில் சூடிக் கொண்டான் அவன் எனவும், செல்லுமிடமெல்லாம் சிம்மாச னத்தையும் கொண்டு திரிந்தான் என்றும் காற்றில் வந்தன பல கதைகள்.

அரசவை ஓவியர்கள் வெகு சிரத்தையுடன் உருவாக் கியிருந்த அந்தப் புன்னகை சிந்தும் முகத்துடனேயேதான் ஊமையனின் கனவிலும் அரசன் வந்தான். கோவில் மணி விட்டு விட்டொலிக்கின்றது. பாட்டம் பாட்டமாக வானத்தில் பறவைகள் அலைகின்றன. வேதம் ஓதுகின்றனர் முனிவர்கள். அது ஒரு நதிக்கரையோரம். பனி அகலாத புல்வெளியில் அரசன் வெண னிற ஆடைகளுடன் தன் கையிலிருந்த வெண்புறாவைத் தடவி யபடி நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் ஊமையன். சௌந்தர்யத்தைக் கண்டு சூரியன் கூட சற்றுத் தயங்கித் தடுமாறி வந்த ஓர் இளங்காலை

அரசன் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

'மேகங்கள் அகன்று கொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்ச நேரம்........ கொஞ்சநிமிஷம்....... வெளிச்சம் வந்துவிடும்......'

அரசனின் குதூகலமான மனநிலை ஊமையனுக்கு ஓரளவு தைரியத்தைத் தந்தது.

'அரசே வெளிச்சம் வருவதற்குள் நாங்கள் இறந்து விடமாட் டோமா...... இப்போதும் என்ன, நாங்கள் நடை பிணங்கள் போல அல்லவா உள்ளோம் ?....

ஊமையனை திரும்பிப் பார்த்து அரசன் சிரித்தான்.

'போர் என்றால் போர்.... சமாதானமென்றால் சமாதானம்.....'

ஊமையன் வார்த்தைகளை மென்று விழுங்கிச் சொன்னான்.

போர் என்றால் ஒரு தர்மமில்லையா அரசே? குடிமக்கள் செய்த பாவம் என்ன? சிசுக்கள், நோயாளிகள், முனிவர்கள், பெண்கள் இவர்களைக் கொல்வது யுத்த தர்மமா? '

அரசன் புன்னகைத்தான். 'தேர் ஒன்று நகரும் போது புற்கள் புழுக்கள் பற்றி முனகுகின்றாய் நீ.... எனக்குத் தெரியும்.... எல் லாம் தெரியும்...'

'நீங்கள் மனது வைத்தால் எதுவும் முடியும். எதுதான் முடியா தது? 'என்றான் ஊமையன்.

அரசனின் நடை திடீரென்று நின்றது. 'ஆம்..... நான் நினைத் தால் எதுவும் சாத்தியம்.....' இதோ பார்!' என்றான் அவன். அரச னின் கையிலிருந்த வெண்புறா சட்டென்று மாயமாக மறைய, முயலின் அறுபட்ட தலை ரத்தத்தில் தோய்ந்து அங்கேயிருந்தது.

அரசனின் வருகை நெருங்க நெருங்க நகரம் அமர்க்களப்பட்டது. அரச காவல் பரண்கள் புதிது புதிதாய் முளைத்தன. இரவு பகலாய் வேலைகள் நடந்தன. சவக்கிடங்குகளின் முன்னால் பூச்செடிகள் நட்டு நீரூற்றினார்கள் இலையுதிர் காலம் நிரந்தரமாகி விட்ட இந்த நகரத்தின் வாயில்களில் வேற்றூர்களிலிருந்து மரங்களை வேர்களுடன் பெயர்த்துக் கொணர்ந்து நட்டார்கள். நூறு வருஷத் தொடர் மழையாலும் கழுவ முடியாத ரத்தக்கறை கொண்ட மதில்களுக்குப் புதுவர்ணம் பூசினார்கள். புன்னகை சிந்தும் அரசனின் ஓவியங்கள் சுவரெங்கும் நிறைந்தன. சோதனைச் சாவடிகளில் மாட்டு வண்டிகள் நீளத்துக்கு நின்றன. கொட்டும் மழையில் ஆடைகள் நனைய, பொதிகளைத் தூக்கித் தலையில் வைத்தபடி மௌனமாக ஊர்ந்தனர் ஜனங்கள். நாக்கு களை நீட்டச் செல்லி அங்கே புதைத்திருக்கக் கூடிய அர விரோத சொற்களை அவர்கள் தேடிப்பார்த்தனர். நகரத்துக்கு வேளை தெரியாமல் வந்து விட்ட பசுவொன்றின் வயிற்றைக் கீறி அதன் பெருங் குடலை ஆராய்ந்து பார்த்தனர். எருமையின் குதத் துள்ளும் கைவிட்டு ஏதேனும் கிடைக்குமா என்று துழாவினார் கள். மீசையில் நுரை அகலாத கள்ளுக்குடியர்கள் தப்பட்டம் அடித்து வீதிகளில் ஆட்டம் போட்டனர்.

'கோயில் தந்தான் எங்கள் மன்னன் 'கோவில் தந்தான் இன்னுந்தருவான் கேட்கும் எல்லாம் தருவான்.

தில்லாலங்கடி......தில்லா..... பிச்சைப் பாத்திரம் இந்தா......'

திண்ணையிலிருந்த ஊமையனின் தாத்தா இடிப்பதை நிறுத்தி விட்டு பாட்டு வந்த திக்கைப் பார்த்தார். பார்வை தெரியாத அவ ருக்கு ஓசைகளே உலகம். கள்ளுக்குடியனின் பாடல் தாத்தா வுக்குக் கோபத்தைத் தந்திருக்க வேண்டும். கையுரலில் இருந்த வெற்றிலையை வேகமாக இடித்தவாறிருந்தார்.

'கோவிலைத் தருகிறானாமே. மறுபடியும் இடிக்க அவனுக்கு எவ்வளவு நேரமாகும்?' என்று முனகிக் கொண்ட தாத்தா மேலே எதுவும் பேச விரும்பாமல் வெற்றிலையை வாய்க்குள் போட்டுக் கொதப்பிக் கொண்டார்.

அரசன் வருவதற்கு ஒரு தினம் இடையிலிருந்தது. கண்ண யர்ந்து கொண்டிருந்த தாத்தா குதிரைகளின் கனைப்பொலியால் திடுக்கிட்டு எழுந்து உட்காந்தார். வீட்டுவாசலுக்கு வந்த பெண் கள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு மறைந்தனர். பதற்றத்துடன் வந்த அம்மாவை ஊமையன் வெறித்துப் பார்த்தான். அம்மா வின் உதடுகள் உலர்ந்து, விழிகள் வெருண்டிருந்தன. வானத் தை அண்ணாந்து பார்த்து இருகைகளாலும் கும்பிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் போல் எல்லாம் நிகழ்ந்தன. அந்தக் குடியிருப்பின் ஒவ்வொரு வீட்டினுள்ளும் சிப்பாய்கள் நுழைந்து. புறப்பட்டனர். ஊமையனை அவர்கள் கூட்டிச் சென்ற போது அம்மா என்னென்னவோ சொல்லி அழுது பார்த்தாள் மனித பாஷை புரிந்த குதிரைகள் மாத்திரம் தலைகள் அசைத்துக் கனைத்துக் கொண்டன. சிப்பாய்களை நோக்கிக் குரைத்தவாறு, ஊமையனின் கால்களை மறித்தபடி தெருமுனை வரை வந்தது அவனுடைய நாய். சிப்பாய்கள் அதை எட்டி உதைத்து விரட்டினார்கள். பிடிபட்ட ஆண்களின் பின்னால் பெண்கள் தங்கள் வாய்களிலும், வயிறுகளிலும் அடித்துக் கொண்டு பெருங்குரலில் ஒப்பாரி வைத்துத் தொடர்ந்து சென்றனர். குதிரை வீரர்கள் அவர்கள் பக்கமாக ஈட்டிகளை ஓங்கி அச்சுறுத்தி விரட்டினார்கள். குதிரைகள் கிளப்பிய புழுதிப் படலத்தினூடாகத் தங்கள் ஆண்பிள்ளைகள் சென்று மறைவதை தெருமுனையில் செய்வதறியாது நின்று விட்ட பெண்கள் கண்டனர். சுவரில் முதுகை முட்டுக் கொடுத்தபடி நின்ற தாத்தா அங்கு நின்றவர்களுக்கு ஆறுதல் தரும் விதத்தில் சொன்னார். ஒன்றும் ஆகாது...... நாளைக்கு அரசன் வருகிறான் அல்லவா? அதற்குக் கூட்டம் சேர்க்கிறார்கள்...' சுவரிலிருந்த பல்லியொன்று அவ்வேளை பார்த்து சத்தமிட்டது தாத்தாவுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

பிடிபட்ட அனைவரும் நகரத்து சத்திரங்களில் அடைக்கப்பட்டனர். இவர்களைப் போன்றே சுற்றியுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப்பட்டவர்களால் சத்திரங்கள் நிரம்பி வழிந்தன. ஒருவரோடு ஒருவர் பேசாமல் பழுக்கக் காய்ச்சி தங்கள் தலைகளில் இறக்கப்பட்ட விதியை எண்ணி நொந்தவர்களாக அங்கு எல்லோருமிருந்தனர். சிப்பாய்களின் சிரிப்பொலி ஏளனத்தின் அம்புகளாக அவ்வப்போது இவர்களின் காதுகளின் இறங்கிற்று.

ஊமையன் அந்தக் குளிர்ந்த சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டான். இருள் நிறைந்த பலிபீடத்தில் வெட்டரிவாள் ஒன்று பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. நரி போல் ஊளையிடும் காற்றில் சுருக்குக் கயிறொன்று அங்குமிங்குமாக அசைந்து ஊஞ்சலாடுகின்றது. கழுத்துவரை மண்ணில் புதையுண்ட அவனை நோக்கி யானைகளின் தடித்த பாதங்கள் மூர்க்கத்துடன் முன்னேறி வருகின்றன. அவனுடைய நிர்வாண உடம்பில் புதிது புதிதாய் ரத்த வரிகளை எழுதுகின்றன சாட்டைகள். கனவுமற்ற நினைவுமற்ற இரண்டுங் கெட்டான் பெரு வெளியில் அவனுடைய வீடும் வந்தது. கூட்டிப் பெருக்காத வாசலில் வாடிய பூக்களும், சருகுகளும் கிடக்கின்றன. உற்சாகமிழந்த நாய் வாசற்படியை மறித்துப் படுத்திருக்கின்றது. சாம்பல் அள்ளாத அடுப்படியில் சோம்பல் பூனை. சமையலறையில் குளிர்ந்து போயிருக்கும் பாத்திரங்கள். ஒரு கருநிற வண்டைப் போல சுவர்களிலே முட்டி மோதித் திரிவார் தூக்கம் வராத தாத்தா. உண்ணாமல், உறங்காமல் கண்களின் ஈரம் காயாமல் அம்மா சுருண்டு கிடப்பாள்.

நிமிஷங்களைப் பெரும் பாறைகளாய்த் தன் தலையில் சுமந்து இருட்டின் பெருங் காட்டில் அலைந்தான் ஊமையன். சத்திரத்துக் கதவு திறபட்டதும் உள்ளே புகும் காற்றுக்காகவும் வெளிச்சத்துக்காகவும் அவன் விழி மூடாமல் காத்துக்கிடந்தான்.

விடிந்தது. வெளிச்சத்தை முந்திக்கொண்டு கதவு வழியாக சிப்பாய்களின் தலைவன் உள்ளே நுழைந்தான்."ஏய் எழும்புங்கள்... எழும்புங்கள்" என்று அதட்டினான்.

அவர்களை ஏற்றிக் கொண்டு நகரத்து வீதிகளில் மாட்டு வண்டிகளின் விரைந்து சென்றன. மாட்டுவண்டியின் தொடர்ச்சியான ஜல் ஜல் சத்தத்தை கேட்டு அங்காடித் தெரு வணிகர்கள் அப்படியே நின்றார்கள். எண்ணெய் வழியும் முகங்களுடன், தூக்கம் நிறைந்த கண்களுடன், வாரப்படாத தலைகளுடன், பசி கொண்ட வயிறுகளுடன் உலகத்தின் மிகக் கேவலமான விலங்குகளைப் போல இப்படிப்போவது ஊமையனுக்குப் பெரும் வெட்கத்தைத் தந்நது. இடியுண்ட கோயிலின் அருகிலிருந்த குளக்கரையில் அனைவரும் இறக்கப்பட்டனர். சிப்பாய்களினால் வரிசையாக அமர்த்தப்பட்டனர்.

வானம் இருண்டிருந்தது. மழையையும் அரசன் கையோடு கூட்டி வந்து விட்டதாக சிப்பாய்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

'ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ கம்பீர.....' என்று ஒரு குரல். திடீரென வாத்தியங்கள் முழங்கின. மகுடி வாத்திய விற்பன்னர்கள் நகரத்து சிறுமிகளை நெளியும் பாம்புகளாக்கி ஆட்டுவித்தார்கள். கள்ளுக்குடியர்கள் கால்கள் நிலத்தில் படாது குஸ்தியடித்தவாறு வந்தனர். பின்னால் அரசன் வந்து கொண்டிருந்தான். முனிவர்கள் தாடிகளை மீறிய புன்னகையுடன் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

உயரமானதோர் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலை அடைந்த அரசன் அனைவருக்கும் கையசைத்தான். தொண்டை பெருத்த கவிஞர்கள் அந்தக் குளிர் வேளையிலும் பனையோலைச் சுவடிகளால் அரசனுக்கு சாமரம் வீசினார்கள் அரசவைக் கவிஞரின் நாவிலிருந்து பனிக்கட்டிகள் கொட்டியவாறிருந்தன. ஒருபக்க மீசையை மழித்துக் கொண்ட எடுபிடிகள் அரசனின் பின்புறமாக உட்கார்ந்து, அவனுக்கு அரிப்பெடுக்கையில் முதுகைச் சொறிந்து கொடுத்தனர்.

ஊமையன் அண்ணாந்து பார்த்தான். கறுப்பு ஆடையைக் கழற்றி வீசி, அம்மணாங் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தது வானம். வானத்துப் பறவையொன்றின் எச்சம் போல ஒரு சொட்டு ஊமையனின் முகத்தில் முதலில் விழுந்தது. பின்னர் வேகமான பல சொட்டுகள், இரைச்சல் காற்று திசை காட்ட மழை தொடுக்கும் யுத்தம். பலத்த மழையின் நடுவே அரசன் பேச எழுந்தான். கொட்டுகின்ற மழையிலும் அசையாத மக்கள் அவனுக்கு வியப்பளித்திருக்க வேண்டும்.

'என் உயிரிலும் மேலான மக்களே.....'

மழையோசையை வெல்ல முயலும் அரசனின் குரல்.

குலை தள்ளிய வாழைகளாலும், குருத்தோலைகளாலும், செந்நிறப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் நின்று மழையில் நனையாத அரசனின் குரல். ஊமையன் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தான். பேய் பிடித்த பெண்ணாகி வாயிலும், வயிற்றிலும், முதுகிலும், முகத்திலும் மாறி மாறி அறைகின்ற மழை.

'இடியுண்ட கோவிலைப் புதுப்பிக்க இன்றைக்கு வந்திருக்கின்றேன். இன்னும் என்னென்ன வேண்டும் சொல்லுங்கள்.'

காற்றும் மழையும் பதில் குரல் எழுப்பின. சிப்பாய்களின் ஈட்டிமுனைகளுக்கும் உருட்டும் விழிகளுக்கும் பயந்து அசையாமல் மௌனமாய் இருந்தனர் ஜனங்கள்.

'கொட்டுகின்ற மழையிலும் என்னைப் பார்க்க இவ்விதம் கூடியிருப்பது என்னை உணர்ச்சி கொள்ளச்செய்கின்றது. உங்களுக்கு என்ன வேண்டும். உடனே கேளுங்கள்.

ஊமையன் மீண்டும் அண்ணாந்து பார்க்கிறான். வருண பகவான் பற்களை நற நற வென்று கடிக்கின்றான். நீரேணி வழியாக இறங்கும் அவன் கைகளில் மின்னல் சாட்டைகள். சுழித்துச் சுழித்துப் பாதையெடுத்து ஓடுகின்றது தண்ணீர், நெருப்புப் பாம்புகள் வானமெங்கும் நெளிவதும், மறைவதுமாய் ஜாலங் காட்டுகின்றன.

'மாட மாளிகைகள் கட்டித் தருகின்றேன். வீதிகளைச் செப்பனிட இன்றே ஆணையிடுகின்றேன். குளங்களைத் திருத்தித் தரச் சொல்கிறேன். இன்னும் என்ன வேண்டும்? அரங்குகள் வேண்டுமா? நவ தானியங்கள் தேவையா? பட்டாடைகள் வேண்டுமா? என்ன வேண்டும் சொல்லுங்கள்...... இவற்றை எல்லாம் நான் தரத் தயார். ஆனால் ஒருபோதும்......'

அரசன் தன் வாக்கியத்தை முடிப்பதற்குள் ஒரு பெரிய மின்னல் ஒரு பெரும் ஓசை. வானத்திற்கும் பூமிக்குமாகக் கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல். ஒருகணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். கண்களைக் கசக்கிவிட்டு அவன் உயரத்தே பார்த்தான். பேசிக் கொண்டிருந்த அரசன் மாயமாக மறைந்து போயிருந்தான்.

**- உமா வரதராஜன் -**

## கல்லெறி

*நாய்களுக்கு*
*கல்லெறிபவர்கள் வருகின்றார்கள்*
*புணரும் நாய்களின் அசிங்கத்தில் ,*
*வீசும் கற்கள் விழுகின்றது*
*பெண் ஜென்மம் மீது.*
*பின்னொரு நாள்*
*பெண் நாய்க் குட்டிகள்*
*வீசப்படுகின்றது வீதி எங்குமாக*
*கண் விழிக்காத ஜீவன்கள்*
*கதறும் சத்தம் கேட்டு*
*கல்லெடுக்கின்றார்கள்*
*இப்போ கல்லெறிகள்*
*நாய்களுக்கு மட்டுமல்ல..*

**- ஜஸ்ரின் -**

## தீக்குச்சி

*மூளையற்ற தீக்குச்சியின் முகத்தில்*
*யாரோ சம்மட்டியால் அடிப்பதை*
*உணர்த்துகின்றது*
*பற்றி எரியும் தீக்குச்சி*
*மெழுகுதிரிக்கு*
*உயிர் கொடுக்கும்*
*கருகும் தீக்குச்சியின்*
*மரணப் புகையாற முன்*
*உருகும் திரி*
*சுடுகண்ணீர் வடிக்கின்றது*
*"சிவந்த அணலே*
*நீ முத்தமிட்டதால்*



*நான் மூச்சைத் தொடர்ந்தேன்*
*நீ கருகுவதற்காகவா*
*நான் உயிர் பெற்றேன்*
*இருளை விரட்டவே*
*நான் எரிந்தேன்*

*பிறருக்கு நான் ஒளி கொடுக்க*
*தீச் சிறகு தந்த தீக்குச்சியே*
*கணல் விதைத்து*
*காற்றில் முளைத்தாய்*
*உயிருள்ளவரை*
*உருகுகின்றேன் உனக்காய்!"*

**- ஜஸ்ரின் -**

## நிரப்பியின் புதுவரவு.



*யாழ்ப்பாணத்துப்*
*புத்திஜீவியாக மாறிக்கொள்ள*
*முடிவு செய்திருக்கிறேன்.*

*யார் எதைச் சொன்னாலும்*
*தலையாட்டி ஆமோதிக்கவும்*
*சேர்ந்து பெரும்பான்மையோருடன்*
*கருத்தொருமித்துக் கதைக்கவும்*
*பழகியிருக்கிறேன்.*
*ஏற்கனவே*
*புத்திஜீவியாயிருப்போருடன்*
*கூட நின்று நிறையவே*
*புகைப்படங்களும் எடுத்தாகிவிட்டது.*

*தலையாட்டுவற்கு*
*மிக வசதியாக*
*எனது முதுகெலும்பையும்*
*நல்ல விலைக்கு விற்றாகிவிட்டது.*

*மேல் நாடொன்றிடம்*
*மூளையையும் பத்திரப்படுத்தி*
*அடகு வைத்தாயிற்று.*
*விலைக்கு யாரும் கேட்டால்*
*நல்ல விலை கிடைத்தால்.*
*விற்று விடவும் தயார்*



*பாராட்டு விழா நடாத்த*
*நாலு பேரையும் சேர்த்தாயிற்று.*
*பலரது விழாவை*
*முன்னின்று செய்துமாயிற்று.*
*எனவே*
*எனது விழாவில்*
*சபை கண்டிப்பாக நிறையும்.*
*ஆக மொத்தத்தில்*
*அடுத்ததொரு புத்திஜீவியாக*
*தயாராகிவிட்டேன்.*
*இனி...*

**கை.சரவணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுவும்...

(02ம் பக்கத் தொடர்ச்சி...)

இதே போல் நாம் எனி யாழ்ப்பாணத்து நிலை பற்றி ஆராய்வோமானால் நாம் முதலில் ஜேர்மணியினதும் கொரியாவினதும் பொருளாதார முறைமைகளை உற்று நோக்குவாமாயின் இரண்டாம் உலகப் போரிற்கு முன்னர் கிட்லரின் ஆட்சியே ஜேர்மனியில் மேற்கு ஜேர்மன் மக்களின் குடியிருப்பாகவும் கிழக்கு ஜேர்மன் தொழிற்பேட்டைகளாகவுமே இருந்திருக்கின்றது. இதனாலேயே இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்காவும் இங்கிலாந்தும் நாஜி படைகளை முறியடிக்க கிழக்கு ஜேர்மனியை குறிவைத்து அதனை கைப்பற்றி ஜேர்மனியை நிலை குலைய செய்ததோடு மட்டுமல்லாது தொழில் நுட்பங்களையும் எடுத்துக் கொண்டன. இதே போல் கொரியாவையும் தற்சமயம் பார்ப்பீர்களேயானால் தென்கொரியா மக்கள் குடியிருப்பாகவும் அவர்களின் தொழிற்பேட்டைகள் வட கொரியாவிலும் காணப்பட்டதோடு இன்று வட-தென் கொரியாவாக அந்நாட்டை அந்நிய நாடுகள் பிரித்ததுடன் அமெரிக்காவும் வடகொரியாவையே அதன் தொழிநுட்பத்துக்காகக் குறிவைத்துள்ளது. இவற்றை ஏன் சொல்ல வேண்டியேற்படுகிறதெனின் இவ்வாறே எமது வடபுலத்தின் கோட்டையாகிய யாழ்ப்பாணம் மக்களின் குடியிருப்பாகவும் தொழில் இடமாக கிளிநொச்சியும் காணப்படுகிறது.

மீன்பிடியும் வர்த்தகமும் விவசாயமுமே எமது யாழ் மக்களின் பெரும் தொழிலாக காணப்பட்டது. இனப்பிரச்சினையின் பின்னரே ஒருபகுதி மக்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் சொந்தங்களில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் பெருமளவினர் இன்றும் மீன்பிடியிலும் விவசாயத்திலுமே தங்கியுள்ளனர். இன்று கரையோரப் பிரதேசங்கள் இராணுவப் பாதுகாப்பு வலையங்களாகவும் பாதுகாப்பு அரண்கள் நிறைந்த பிரதேசமாகவும் காணப்படுவதால் எமது மீனவர் சுதந்திரமாக தொழில் ஈடுபட முடியாமல் இருப்பதுடன் புதிதாக முளைத்த தென்பகுதி மீனவரின் ஆதிக்கத்தில் இருந்து தம்மை நிலைநிறுத்த முடியாமலும் தள்ளாடுகின்றனர். இதனால் எம் மக்களின் மீன்பிடித் தொழில் பெருமளவில் நசுக்கப்பட்டுவிட்டது.

அதேபோல் வர்த்தகத் துறையை எடுப்போமாயின் இன்று யாழ்ப்பாண வர்த்தகர்கள் பலர் பாரிய கடன் சுமையில் தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் யாழ் நகரின் அபிவிருத்தி என்ற பெயரில் பல மாடிக் கடைத்தொகுதிகளையும் வீடுகளையும் கட்ட அனுமதி வழங்கப்பட்டு அதனை விரைவாக கட்டி முடிப்பதற்காக வங்கிகடன் களையும் பெற்று அனைத்து திரவச் சொத்துக்களையும் இவர்கள் இன்று திண்மச் சொத்தாக மூலதன சொத்தாக மாற்றியுள்ளனர். இதனால் பணம் முடக்கப்பட்டு பெருந்தொழில் அதிபர்கள் வங்கிகடன்களைச் செலுத்த முடியாத நிலைக்குச் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் அவர்களின் கட்டிடங்களை வங்கிகள் உரிமம் எடுத்து ஏலம் விடும் நிலையும் உருவாகியுள்ளது. இது தவிர, பல லீசிங் கம்பனிகள் ஆசை வார்த்தை காட்டி வாகனங்கள் பலவற்றை இவ்வர்த்தகர்களை கடனிற்கு வாங்க வைத்து (உதாரணமாக யாழ் கொழும்பு பிரயாண பஸ் வண்டிகளைக் கூறலாம்.) அக் கடனைக் கட்ட முடியாத நிலைக்கு இதனை விட, இன்று வடபகுதியில் பெருகியுள்ள தென்பகுதி நாடோடி வர்த்தகர்களின் தொகையும், பெரும் கம்பனிகளின் நேரடி வருகையாலும் அவர்களின் போட்டி வர்த்தகத்துடன் எமது வர்த்தகர்கள் எதிர் நீச்சல் இட்டு செயற்பட கையில் முதல் இல்லாத காரணத்தாலும் எம்மவர் வர்த்தகத்தில் வீழ்ச்சி கண்டுள்ளனர். ஆகவே இன்று தமிழர்களின் வர்த்தகத் துறையும் பலவீனமாக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

ஆகவே, இவ்வாறான நிலையில், நமக்கு எஞ்சியிருப்பது எமது பாரம்பரிய தொழிலான விவசாயமேயாகும். இதுவும் பிளவுபடுத்தப்படின் வடபுலத் தமிழர்கள் எழுந்து நிற்க முடியாத அளவுக்கு அதால பாதாளத்தில் தள்ளப்படுவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்தத் திட்டத்தினை முன்செய்வதற்கான மறைமுக கறுப்புத் திட்டமாகவே (Black Project) இரணைமடுக் குடிநீர் விஸ்தரிப்புத் திட்டத்தை கருத வேண்டியுள்ளது.

(இரணைமடு தொடரும்...)

# யாழ்ப்பாணத்திற்கான...

(02ம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனையிறவு ஏரி ஆனையிறவு தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள சுமார் 11,400 ஏக்கர் பரப்பை கொண்டது. இவ் ஏரி கனகரா யன் ஆறு, நெத்தலி ஆறு, பிரமந்தலாறு, தேராவில் ஆறு மற்றும் சிற்றாறுகளிலிருந்து வரும் நீரை பெறுகின்றது.

இதன் வடக்கே வானைக் குளமும் தெற்கே கரைச்சி காணிகளையும் கொண்டுள்ளது. பாலத்திற்கு அருகில் ஓர் தடுப்பை ஏற்படுத்தி சுண்டிக்குளத்திற்கு அண்மையில் பொருத்தமான வான்கட்டை அமைப்பதனுடாக இவ் ஏரிக்குள் உட்புகும் நன்னீரானது ஆனையிறவு நன்னீர் தேக்கமாக உருவாகும். முள்ளியான் பகுதியூடாக வடக்கில் அமைந்த வாய்க்கால்கள்



இந்நீர்த் தேக்கத்தை யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஏரியாகிய வடமராட்சியைத் தொடும்.

நீண்ட நீர்ப்பரப்பை உடைய வடமராட்சி ஏரியானது பச்சிலைப்பள்ளியில் அமைந்த முள்ளியானில் இருந்து செம்பியன்பற்று, எழுதுமட்டுவாள், வரணி, கரவெட்டி, வல்லைவெளி, ஊடாகப் பரந்து சென்று வல்வெட்டித்துறைக்கு அண்மையில் உள்ள தொண்டமானாற்றினூடாக கடலுடன் தொடுக்கிறது. இதன் கிளையானது சரசாலையில் தொடங்கி யாழ்ப்பாணப் பட்டினம் நோக்கிப் பரந்து செம்மணிக்கு அண்மையில் உள்ள அரியாலைக் கடலை அடைகின்றது.

இது கிட்டத்தட்ட ஒரு மைல் அகலமாக குடாநாட்டில் இருதயப் பகுதியில் கூடுதலாகவோ குறைவாகவோ முழுமையாக பரந்து காணப்படுகின்றது. இது குடாநாட்டின் வாழ்க்கையிலே தாக்கத்தைச் செலுத்தும் முழுமையான வைப்பகமாக இருக்கிறது. தொண்டமானாற்றில் பூர்த்தியாக்கப்பட்ட 600 அடி நீளமான தடுப்பணை ஊடாக கடல் நீர் உட்புகுவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனையிறவில் செய்யப்பட வேண்டிய வேலைத் திட்டம் மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. ஆனையிறவு பாலத்திற்கு அருகிலே உள்ள தடுப்பணை கனகராயன் ஆற்றிலிருந்து வரும் வெள்ள நீரை சேமித்து பாதுகாத்து மேற்குப் பகுதியில் உள்ள கடல் நீர் ஊடுருவாமல் தடுக்கும். இதன் கிழக்கு எல்லையில் சுண்டிக்குளத்தில் அமைந்த ஒன்றேகால் (1.25) மைல் நீளமான பாதையோடு இணைத்து கட்டப்பட்ட தடுப்பணையும், வானும் மேலதிக வெள்ள நீரைப் பாதுகாப்பாக கடலுக்குள் செலுத்துவதற்கும், கடல் நீர் கிழக்கிலுள்ள ஏரியினுள் உட்புகாமலும் உறுதிப்படுத்தும்.

இவ்வாறு கிழக்கிலும் மேற்கிலும் அமைக்கப்பட்ட கட்டமைப்புக்கள் மேலதிக வெள்ள நீரைப் பெற்று பாதுகாப்பாகச் சேமித்து வைக்கும் அதே நேரத்தில் இதன் மூன்றாவது அங்கமான இணைப்புக் கால்வாய் தேங்கிய நீரை யாழ்ப்பாண குடாநாட்டின் இருதயப்பகுதிக்குக் கொண்டு செல்லும்.

இவ் வேலைத்திட்டத்தின் முடிவில் கனகராயன் ஆற்றின் வெள்ள நீர் ஆனையிறவு ஏரி மற்றும் வடமராட்சி ஏரிகளின் உவர் நீர் தன்மையைப் படிப்படியாக நீக்குவதற்குப் பயன்படும்.

வண்டல் படுக்கை அமைந்த இரண்டாம் நிலைத் தேக்கத்திலும் பார்க்க உவர் நீர் வெளி யேறி களிமண் படுக்கையுள்ள முதன்மைத் நீர்த்தேக்கம் அமைவதற்கு விரைவுபடுத்தும். குறுகிய காலத்தில் உவர்த்தன்மை குறைப்பா னது உடனடியாக முடிவுக்கு கொன்டுவரப்பட முடியாத போதிலும் இதனால் ஏற்படும் நன்மை களைப் பெறுவதற்கு அதிக காலம் காத்திருக்கத் தேவையில்லை

இதன் பயன்கள் உடனடியாக வந்தடையாமல் ஒவ்வொரு மழைக்காலத்தின் பின்பும் மேலும் மேலும் விருத்தியடையும். மேலும் பகுதியான உவர் நீரானது பயன்படுத்த முடியாவிட்டாலும் வேளாண்மைக்கு உகந்ததாகத் காணப்படும் அதேவேளை இந்நிலை குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் உள்ள பல கிணறுகள் மூலமாக செய்யப்படும் வேளாண்மையினால் இது புலப்படும்

நாட்கள் செல்லச் செல்ல மாசி பங்குனி சித்திரை மாதங்களில் உள்ள கூடிய வெப்பத்தினால் குறிப்பிடத்தக்க ஆவியாதல் நிகழும் இரண்டாம் நிலை நீர்த்தேக்கத்தின் கூடிய அளவான நீர் இழப்பை ஆனையிறவு நீர் தேக்கத்திலிருந்து நீரைக் கால்வாயினுடாகச் செலுத்தி இரண்டாம் நிலைத் தேக்கத்தைத் தொடர்ந்தும் நிரம்பல் நிலையில் வைத்திருக்கலாம்.

இவ்வாறான நிரப்பு நிலையானது தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காலமான ஆனி. ஆடி மாதங்களில் ஏற்படும் பாரியளவு ஆவியாதலின் விளைவாக இச் செயற்பாடு சாத்தியமற்றதாக இருக்கும் இதன் விளைவாக, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நன்னீரேரியைக் கொண்டிருப்பதன் விளைவாக குடாநாட்டில் உள்ள நிலங்கள் விருத்தியடைந்து பன்மடங்கு நன்மையடையும்

இதன் மூலம் நிலக்கீழ் நீர் தாராளமாக அமைவதோடு நீர் மட்டமும் உயர்வடையும் வருடங்கள் செல்லச் செல்ல கிணற்று நீர் மட்டமும் உயர்வடையும்

இந்நிலத்தின் கீழுள்ள மண்ணின் ஈரப்பதன் அதிகரிக்கும். தாவர வளர்ச்சி பல்கிப் பெருகும். தென்னைகளுக்கும் ஏனைய மரங்களுக்கும் கோடையில் ஏற்படும் உற்பத்தி வீழ்ச்சி நிலைமை இல்லாமல் போகும். இத் திட்டம் அமைந்துள்ள ஏரியின் அண்மையில் உள்ள 15,000 ஏக்கரிலும் மேலான காணிகள் வேளாண்மை விருத்திக்கு உதவும். மேலும் வவுனியா மாவட்டத்தில் உற்பத்தியாகும் கனகராயன் ஆற்றின் நீரை யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கொண்டு வந்து தொண்டமானாறு மற்றும் யாழ்ப்பாணப் பட்டினத்தின் எல்லையில் அமைந்துள்ள அரியாலையில் உள்ள வானூடாக பாயச் செய்யும்.

## அரசுடன் ஒத்துழைத்தல்...

(03ம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுள்ளது. மாகாணசபை அதிகாரக்குறைப்பு பற்றியும், வட மாகாணசபை அரசாங்கத்தினால் வஞ்சிக்கப்படலாம் என்றும் சர்வதேச அச்சம் நிலவுகிறது. ஜனாதிபதியிடம், வடக்கு மாகாணசபைக்கான நிதி ஒதுக்கீடுகள் எவ்வாறு இருக்கும் என்று ஐ.நா பொதுச்செயலர் பான் கி மூன் எழுப்பிய கேள்வி இதற்கு ஓர் ஆதாரம். ஐ.நா பொதுச்செயலரிடம் மட்டுமன்றி, அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் தேர்தல் முடிந்த பின்னர் வெளியிட்ட அறிக்கைகளிலும் இதே கேள்வி இருக்கிறது.

மாகாணசபைக்கான போதிய அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்றும், வட மாகாணசபையில் தமிழ்த் தலைமைக ளுடன் அரசு இணைந்து செயற்பட வேண்டும் என்றும் உலக நாடுகள் வலியுறுத்தியிருந்தன. இக்கருத்துக்கள் தமிழ் மக்கள் தமக்கான அதிகாரங்கள் குறித்து திருப்தி கொள்வதே இரு இனங் களிடையேயும், இணக்கமான நம்பிக்கையான சூழலைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் என்ற கருத்தியலின் அடிப்படையிலானவை.

ஆனால் கூட்டமைப்பின் ஒத்துழைப்பினை எவ்வித மான அதிகாரப்பகிர் விற்கோ, இணக்கப்பாட்டிற்கோ நிபந்தனையாக்காமல் வடக்கின் அபிவிருத்தி, மேம்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க நிபந்தனையாகக் குறிப்பிடுவதன் மூலம் அரசு தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்பதனை மீளவும் வலியுறுத்தியிருக்கின்றது. தான் ஒத்துழைக்கத் தயாராக இல்லாத நிலையில் அரசு அபிவிருத்தியின் பெயரால் கூட்டமைப்பின் ஒத்துழைப்பைக் கோரி நிற்கிறது. இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபை முதலமைச்சர் மற்றும் உறுப் பினர்கள் ஜனாதிபதி முன்னிலையிலோ வடமாகாண ஆளுநர் முன்னிலையிலோ பதவியேற்கமாட்டார்கள் என ஒருநாள் எதிர்ப்பரசியலும், இருஇன பொது மக்களையும் ஒன்றுபடுத்த உறுதுணையாக ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்பதென மறுநாள் இணக்க அரசியலும் பேசுவது தமிழர்களின் அரசியல் தலைமைகளின் இராஜதந்திரத் திறனை கேள்விக்குள்ளாக்குவதுடன் மீண்டும் தமிழர் பிரச்சனையை உலக நாடுகள் கைவிடும் நிலைமைக்கு இட்டுச்செல்லலாம்.

தூரநோக்கின் அடிப்படையிலும் குறுகியநோக்கின் அடிப்படையிலும் கடமையாற்றும் படி மக்கள் ஆணை வழங்கியுள்ளதாகவும், எமது தனித்துவத்தை வலியுறுத்தும் தூரநோக்கினை அடைய கடந்தகாலப் போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள், அனுபவங்கள் யாவற்றிலிருந்தும் பாடங்களைக் கற்றே முன்னேற வேண்டி உள்ளது எனவும், குறுகிய நோக்கு என்பது போருக்குப் பின்னரான எமது மக்களின் தேவைகளை காலதாமதம் இன்றி பூர்த்தி செய்வது எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது தமிழர்களிடம் ஆணைகேட்ட இராஜதந்திரப்போர் தாமதமாகும் என்பதையும், அபிவிருத்திக்கான அரசின் கரங்கள் இறுகப் பற்றப்படும் என்பதையும் இராஜதந்திரச் சொல்லாடலில் குறிப்பிடுவதனை உணர தமிழர்களுக்கு அதிக காலம் எடுக்காது. அந்த அடக்குமுறைக்குள் இருந்து கொண்டு, அரசின் வேலைவாய்ப்பு, சலுகைகள், அபிவிருத்தி பற்றிய வாக்குறுதிகள் எனும் மாயைகளுக்குள் சிக்கி விடாமல், அரசின் அடக்குமுறைக்கு எதிராக, வாக்களித்த தமிழர்களின் தியாகம் மீண்டும் அபிவிருத்திக்கான ஆணையாக திரிபுபடுத்தப்படுதல் தமிழினத்தின் அபிலாஷைகளைப் பெறுவதற்கான இறுதிச்சந்தர்ப்பமும் இழக்கப்பட்டுவிடுமோ என்ற நியாயமான அச் சத்தினை அநேகரிடம் தோற்றுவித்துள்ளது.

உலகின் பார்வையும் தமிழ் மக்களுடைய அவலமும் சர்வதேசத்தின் முன்னால் எழுச்சி பெற்று இருக்கும் நிலையில் அதனை சிதைக்கும் வகையில் அரசுடன் பேச்சவார்த்தை, இணக்க அரசியல் மேற்கொள்ளும் இந்த அணுகுமுறை, அரசானது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தம்முடன் ஒத்துப்போவதாகக் கூறி சர்வதேசத்தின் அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் அழுத்ததில் இருந்து விடுபடவும், மனித உரிமைகள் ஆணையாளரின் அரசுக்கு எதிரான சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து விடுபடவும் உதவலாமே தவிர தமிழ் மக்கள் தமது இன்னல்களில் இருந்து விடுபட ஒருபோதும் உதவப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பது எப்படி?

S.சுரேஸ்குமார் B.Sc. (Hons), M.BA (Lon.)



**மாணவர்களிற்குப் பயனுள்ள கற்றல் முறைகள் எவை?**

- ஒரு ஆசிரியர் வகுப்பில் 100 விடயங்களைக் கற்பிப்பார் ஆயின் மாணவன் உடனடியாக மீள ஞாபகப்படுத்தக் கூடியது ஐந்து விடயங்களாகவே இருக்கும்.
- அதே விடயத்தை மாணவன் வாசிப்பாராகில் 35 விடயங்களை மீள ஞாபகப்படுத்துவார்.
- இதே 100 விடயத்தை வாசித்து, எழுதிப் படிப்பாராகில் 45 விடயங்களை மீள ஞாபகப்படுத்துவார்.
- அதே 100 விடயத்தை சக நண்பர்களோடு குறிப்பெடுத்து கலந்துரையாடுவாராகில் (2 அல்லது 3 பேர்) 98 விடயங்களை அவர் ஞாபகப்படுத்துவார்.
- அதே 100 நூறு விடயத்தை இன்னொருவருக்கு கற்பித்தால் அல்லது கற்பிப்பது போன்று பாங்கு செய்து கற்றால் 100 விடயங்களையும் இலகுவாக ஞாபகப்படுத்தும் ஆற்றலை மாணவர்கள் பெறுவார்கள். ஞாபகப்படுத்துவர்.

**ஒரு பாடத்தைக் கற்பித்து முடித்த பின்னர் செய்ய வேண்டிய வேலை என்ன?**

- சுருக்கமான குறிப்புக்களை எழுதிக் கொள்ளல்.
- வினாக்களுக்கு விடையெழுதுதல்.
- பாடத்தைப் பொழிப்பாக எழுதிக் கொள்ளல்.
- கற்றவற்றை ஞாபகப்படுத்தி எழுதுதல்.
- கற்றவற்றை மீண்டும் நினைவு கூர்ந்தல்.

**படிக்கும் மேசையில் உங்களுடைய எல்லாப் பாடப் புத்தகங்களை ...ம் நோட்சையும் வைக்கலாமா?**

இல்லை, ஏனெனில் எல்லாப் பாடப் புத்தகங்களையும் நீங்கள் படிக்கும் மேசையில் வைப்பீர்கள் ஆயின் அவை மிகப் பெரிய மனச் சுமையாகவும், ஒரு பாடத்தைப் படிக்கும் போது மற்ற பாடங்களின் மீது கவனம் சிதறுவதற்கான வாய்ப்பும் உண்டு.எனவே நீங்கள் வாங்கு ஒன்றில் அல்லது கபேட்டில் புத்தகங்களை அடுக்கி வைக்கலாம்.உங்கள் நேர அட்டவணையைப் பார்த்து படிக்க வேண்டிய பாடத்தை மட்டும் உங்கள் மேசையில் எடுத்து வைத்துப் படித்தால் மிகவும் ஆனந்தமாகவும் ஆறுதலாகவும் குழப்பமின்றி விழங்கவும் உதவும்.

**உங்கள் நேர அட்டவணையை எவ்வாறு தயாரிக்கலாம்?**

நேர அட்டவணை தயாரிக்கும் போது உங்களிற்கு நன்கு விருப்பமானதும் விளங்குவதுமான பாடத்தை முதலில் தெரிவு செய்யுங்கள். பின்னர் ஏனைய பாடங்களைத் தெரிவு செய்யுங்கள்.இயன்றவரை சமநேர பங்கீட்டை வழங்குங்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் அடுத்த பாடத்திற்கும் இடையில் ஐந்து நிமிட இடைவெளி விடுங்கள். நீங்கள் இருக்கையை விட்டு எழுந்து நடந்து ...ரியலாம். வானத்தில் அல்லது தூரத்தில் உள்ள பொருட்களைப் பார்க்கலாம்.

**உங்களுடைய ஆசிரியர் கற்பித்த பாடங்களை உங்கள் கொப்பியில் என்ன முறையில் ஒழுங்கு படுத்தி வைத்திருக்க வேண்டும்?**

- ஒரு புதிய கொப்பி ஒன்றை (4 கட்டு) வகுப்பில் பாவிப்பதற்காக பயன்படுத்த ஆரம்பிக்கும் போது முதலில் குறைந்தது 4 ஒற்றையாவது விடவும்.ஏனெனில் உங்கள் கொப்பியிலுள்ள தலைப்புக்கள் உப தலைப்புக்களைப் பயன்படுத்திப் புத்தகங்களில் உள்ளது போல பொருளடக்கம் தயாரிக்க வேண்டும.
- பொருளடக்கம் தயாரிப்பதற்காக கொப்பியின் ஒற்றையில் ஒவ்வொரு மேல் மூலையிலும் பக்கங்கள் இலக்கமிடுக.
- நோட்சினை மிகவும் நெருக்கியோ அல்லது அடர்த்தியாகவோ எழுதவதைத் தயவு செய்து தவிர்த்தல் வேண்டும்.
- இயன்றவரை பொயின்ஸ் போமில் எழுதுதல் மிகவும் சிறந்தது.
- ஒரு பாடத்திற்கு ஒரு கொப்பியை மட்டும் பின்பற்றுதல் குழப்பங்களின்றி ஒரு தொடராக விளங்கிக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

**ஒரு பாட ஆசிரியர் விளங்கப்படுத்தும் போது அல்லது நோட்ஸ் சொல்லும் போது நீங்கள் எவ்வாறு சிந்திக்க வேண்டும்.**

- ஒரு பாடத்தை ஆசிரியர் விளங்கப்படுத்தும் போது நீங்கள் அதை ஒரு படமாக மனதில் உருவகப்படுத்தி கற்பனை செய்து கொள்ளலாம். உதாரணம்:
- ஒரு உணவுச் சங்கிலி தொடர்பாக விளங்கப்படுத்தும் போது நீங்கள் இயற்கையாக வளர்ந்துள்ள ஒரு காட்டின் சூழல் தொகுதியை எண்ணிப்பார்க்கலாம்.
- இதயத் துடிப்பை விளங்கப்படுத்தினால் உண்மையான இதயம் துடிப்பது போன்று கற்பனை செய்யலாம்.

**இரவு நித்திரைக்குப் போகும் போது என்ன செய்ய வேண்டும்?**

இரவு நீங்கள் படுத்தவுடன் நித்திரை வரும் வரை அன்று ஆசிரியர் கற்பித்த விடயங்களை மீளச் சிந்தித்துப் பாருங்கள் அவ்வாறு சிந்தித்தால் மிக முக்கியமான விடயங்களை ஆழ் மனதிற்குள் செலுத்தி நீண்ட காலம் ஞாபகப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

*(தொடரும்..)*

# பனைமரம் பற்றிய ஓர் பார்வை

திருமதி சுபாக்ஷினி பிரணவன்

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

வேலிகளாக உதவிய மரக்குற்றித்துண்டங்கள், கூரை வளைகள், சலாகைகள், படுத்துறங்கவென இளைக்கப்பட்ட பாய்கள், குழந்தைகளுக்கு எண்ணெய் பூசி கிடத்துவதற்கு உதவிய தடுக்குகள், வைபவ காலங்களில் விருந்தினர்களை அமரச்செய்து உபசரிக்க சாயம் தோய்த்த ஓலைகளால் இளைக்கப்பட்ட பாய்கள், என பனையின் தொடர்பின்றி மனித வாழ்க்கை நடைபெறவில்லை. மேலும் பனை ஓலைப் பாய்களின் தேவை மிக மிகப் பெரிதாகத் உணரப்பட்ட அந்தக் காலத்தில் தமது விளை பொருட்களான சாமி, குரக்கன், கதிர்களை உலரவைப்பதற்கும் எள்ளு, பயறு, மரவள்ளிச்சீவல் எனக் காயப்போடவும் பெரிய கதிர்ப்பாய்கள் பயன்படுத்தப்பட்டன. அக் காலத்தில் கூத்து கொட்டகைகளில் இருந்து கூத்துகளை ரசிப்பதற்கு அசனங்களாக இந்தக் கதிர்ப் பாய்களே உதவின.

பனையை தறித்து இரு கூறாகப் பிளந்து வாய்ச்சியால் சீவி இணைத்து அச்சுலக்கை நென்புகள் இறுக்கி பனந்துலாவாக கிணற்று நீர் அள்ளப் பயன்படுத்தினர். வயிரப் பனைகளை கண்டறிந்து தறித்துப் பிளந்து சீவி வீடு கட்ட வளையாகவும் பரவு மரமாகவும் சலாகையாகவும் மர ஆணியாகவும் மொத்த யன்னல் கம்பியாக உருட்டியும், கப்புகளாக, ஏணிசெய்ய, என பனை தரு பயன் நீள்கிறது.

பனை மாட்டு வண்டில் துலாவாகவும் நுகமாகவும் கிட்டியாகவும் வண்டில் கூடாரமாகவும் உழவு கலப்பையாகவும் சங்கப் படலையாகவும் எழுத்தாணியாகவும் நவீன அலங்காரப் பொருட்களாகவும் அட்டாளை அல்லது கோர்க்காலியாகவும் தோட்ட நீர்ப்பீலியாகவும் கொத்தாகவும் பயன்பட்டமையை யாரும் மறந்து விடக் கூடாது

இன்றும் பனை உயர்ந்த ராஜகோபுர கட்டுமான வேலைகளுக்கு முழுப் பனையாக அடித்தளங்களில் நாட்டப்படுகிறது.


பனங்குருத்து பனை வட்டில் இருக்கும் தறித்த பனைகளில் இருந்து அவற்றைப் பிரித்து எடுத்து உண்பர். குருத்து ஓலை சார்பு எனப்படும்.சார்வை வெட்டி விரித்து நிழலில் சில நாட்களுக்கு உலர விட்டு வாரந்து ஈர்க்கு நீக்கி சட்டம் சட்டமாக நறுக்கி ஒன்று சேர்த்துக் கட்டினால் ஏட்டுச் சுவடி ஆகும். இந்த ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணியால் எழுதி நூலாக்கி நமது முன்னோர் கல்வி கற்றனர். இன்று கூட செய்ய பனை ஓலை பயன்படுகிறது.சேர சோழ பாண்டியர் தம்மிடையே செய்திப் பரிமாறலுக்கு பனை ஓலையையே பயன்படுத்தினர். அதனையே ஓலை அனுப்புதல் என்பர்.

மேலும் பயன்படுத்திய சார்வோலைகளை பெட்டி, அடுக்குப் பெட்டி, கடகம், படுக்கைப்பாய், பெரும்பாய், களப்பாய்(சூடடிக்க) நெடுங்கூடைகள் (நெல்சேமிக்க) நீத்தப்பெட்டியாக, வீபூதிக்குட்டானாக, பனங்கட்டிக்குட்டானாக, விசிறி, சட்டுவம்(உண்கலம்) பிளா (கள், கஞ்சி அருந்த) கோலிய பட்டை (நீர் மொள்ள) பாரிய ஐந்து கோணப்பட்டை சிறுவர்களுக்கான ஊதுகுழல், கொட்டைப் பெட்டி உமல், மீன்பறி, பனைஓலைத் தொப்பி போன்றவற்றை செய்ய பனை ஓலைச் சார்பு பயன்படுகிறது. முற்றிய பச்சை ஓலைகள் ஈர்க்க நீக்கி கிழித்த பால் தரும் பசுவிற்குப் தீனியாக்குவர். பனை ஈர்க்கை கூரை வேயப் பயன்படுத்துவர்.பனை ஈர்க்கினால் சுளகு குல்லம் முளம் திருகணை உறி போன்றவைகள் புனைவர்.

பனை ஓலையை வெட்டி காலால் மிதித்து பதப்படுத்தி கரம் போட்டு அமர விட்டு சில வாரங்களுக்குப் பின் கூரை வேயவும் வேலி அடைக்கவும் உபயோகிப்பர். பனை ஓலையை வேய்ந்த கூரையின் கீழ் படுத்து உறங்குவதே ஓர் இன்பம். பனை ஓலைக் கூரை உக்கியதும் உக்கிய ஓலையை நெல் வயல்களுக்குப் உரமாகப் புதைப்பர். வேலி அடைத்த பனை ஓலையையும் இவ்வாறே பசளை ஆக்குவர்.பசளைக்காகப் புதைத்த பனை ஓலை நெல் வயலில் தேங்கி நிற்கும் நீரை நிலத்தின் கீழ் கசிய விடாது தாங்கும் படையாகவும் பயன்படுவதோடு புதைத்த பனைஓலைப் படை வேண்டாத களைகளை வளர விடாது தடுக்கும் தன்மை வாய்ந்தது.

*(தொடரும்..)*

## ஆனந்தசங்கரி வருத்தம் தெரிவிப்பு



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வராறுகாணாத வெற்றிக்காக இனப்பற்றுடன் செயற்பட்ட மக்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவுசெய்யப்பட்ட முதல்வர், மற்றும் உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சத்தியப்பிரமான நிகழ்விலும்சரி இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அவர்களுடன் நடந்த சந்திப்பிலும் சரி மற்றும் நிகழ்வுகளுக்கும் இதுவரை எனக்கு எதுவித அழைப்பும் வரவில்லை என்பதையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகி றேன்.

**வீ.ஆனந்தசங்கரி**

செயலாளர் நாயகம், தமிழர் விடுதலைக் கூட்டணி.

## சரியா? தவறா?

வடமாகாண் முதலமைச்சர் ஜனாதிபதி முன் பதவியேற்பது சம்பந்தமான விடயத்தை பிரச்சினையாக மாற்றிய பெருமை கூட்டமைப்புத் தலைமையையே சாரும். இந்த விடயத்தை ஒப்புக்கு பல தடவை கூட்டம் கூடி விவாதித்து விட்டு பின்னர், தான்தோன்றித்தனமாக அவர்கள் நினைத்ததைச் செய்து முடித்திருக்கின்றார்கள். இவர்கள் பேரினவாதத்தையும் பிராந்திய ஏகதிபத்தியத்தையும் திருப்திப்படுத்துவதையே பிரதான நோக்கமாக கருதியிருக்கிறார்கள். சம்பந்தன் அவர்கள் "மக்களுக்கு உதவிகள் கிடைக்க வேனும் , மாகாண சபைக்கு கட்டடம் கூட இல்லை" என்கிறார். மக்கள் இதற்காகவா வாக்களித்தார்கள். இது தான் தேவை என்றால் அரசுக்கு வாக்களித்து அதிகமான உதவிகளையும் சலுகைகளையும் பெற்றிருக்கலாமே. எனவே, வாக்களித்த மக்களின் உணர்வையும், ஏன் பாரளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களின் விருப்பங்களையும் தாண்டி சம்பந்தன், சுமந்திரன் கூட்டணி இந்த முடிவை எடுத்திருக்கிறது என்றால், எவ்வளவு தூரம் கொழும்பு வர்க்கத்தின் திமிர்த் தனம்,மொத்த வடபகுதி மக்களினையும் எள்ளளவேனும் மதிக்காமல் செயற்பட்டிருக்கிறார்கள். யாருக்கு இவர்கள் தலைவர்கள்? எப்படி இந்த வெற்றியைப் பெற்றார்கள்? சுமந்திரன் சொந்தங்களா, சம்பந்தன் வாரிசுகளா, விக்கினேஸ்வரன் சம்பந்திகளா



இவர்களுக்கு பிரச்சார மேடை அமைத்து வாக்கு கேட்டு வீடு வீடாய், தெருத்தெருவாய் அலைந்தது? எத்தனை இளைஞர்கள் நீங்கள் இணங்கிப் போக நினைக்கும் அரசுடமே அடி வாங்கினார்கள்? ஆகவே, இன்றைய தலைமை எம்முடையதில்லை என்ற நிலை உருவாகி இருக்கின்றது. எமது இன்றைய நம்பிக்கை மாகண சபைக்கு தெரிவாகியிருக்கும் இளையவர்கள் தான், மாகணசாபை உறுப்பினர்களே, தனித்துவமாக செயற்படுங்கள், சுய முன்னேற்றத்துக்காக தலைமையின் சூழ்ச் சிக்குள் சிக்கி விடாதீர்கள்!

**- சிஜந்தன் கந்தையா -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி வம்பானந்தா

"புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து
பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து" — கமல்ஹாசன்

கிட்டடியிலை நடந்த இரண்டு சம்பவங்கள் கொஞ்சம் யோசிக்க வைச்சிருக்குப் பாருங்கோ. ஆனைக்கோட்டையிலை ஆரோ அடையாளம் தெரியாத ஆக்கள் காவல் காக்கிற காக்கிச் சட்டைக்காரருக்கு கத்தியாலை வெட்டியிருக்கினம், இதே போலை நாயன்மார்கட்டிலையும் கல்லாலை எறிஞ்சிருக்கினம். ஏதோ குற்றங்களோடை சம்பந்தப்பட்ட, காக்கிச்சட்டைக்காரரைப் பிடிக்காத ஒரு கூட்டம் தான் இதைச் செய்திருக்கும் எண்டு பொதுவாய் சனம் கதைக்குது.


இதிலை இன்னொரு பக்கமும் இருக்குது பாருங்கோ. சனத்திலை ஒரு பகுதிக்கு காக்கிச்சட்டையிலை இருந்த பயம் போட்டுது. இந்த நேரத்திலை காக்கிச்சட்டைக்காரர் நிதானமாய் நடந்து பிரச்சனைக்குரிய ஆக்களைப் பிடிக்க வேணும். அதைவிட்டிட்டு வீட்டுக்கை பாம்பு போனது எண்டதுக்காக வீட்டையே கொளுத்துற மாதிரி நடந்து திரும்பவும் இந்த மண்ணிலை இருண்ட காலத்தைக் கொண்டு வந்திடக் கூடாது. யோசிச்சால் நல்லது.

ஆராருக்கு மந்திரி வேஷம் கட்டுறதெண்டு யாழ்ப்பாணத்திலையும் கொழும்பிலையும் மாறி மாறிக் கதைச்சவையல்லோ. எங்கடை பேப்பருகளும் ஒவ்வொரு கூட்டமும் முடிய, அடுத்த கூட்டத்திலை முடிவு எட்டப்படும் எண்டு எழுதிக் களைச்சுப்போய், கடைசியாய் நியூசை மாத்தாமல் திகதியை மட்டும் மாத்தி மாத்தி பிரசுரிச்சவையாம். இதுக்கிடையிலை கூத்தாடுகிற கூட்டத்தலைவர் மந்திரி வேஷம் போட விருப்பமான ஆக்கள் அப்பிளிக்கேசன் போடலாம் எண்டு அறிவிக்க, ஏதோ உத்தியோகத்துக்கு விண்ணப்பிக்கிறதாக்கும் எண்டு நினைச்சு எங்கடை பொடியன் ஒருத்தன் யாழ்ப்பாணம் புத்தகக்கடையிலை போய் விண்ணப்பப் படிவம் விசாரிச்சவனாம். கடைசியாய் வடக்குப் பெரிய மந்திரி தீர்மானிப்பார் எண்டு சொல்லி முதலாம் பாகத்தை தலைவர் முடிச்சு வைச்சவர்.

இந்தக்கூத்துக்களின்ரை இரண்டாம் பாகமாய் நங்கூரப் புத்தருக்கும், நடிகர்திலகலிங்கத்துக்கும் இன்னும் இரண்டு பேருக்கும் எண்டு சொல்ல, அவையள் கனவிலை மிதந்தவையாம். அடுத்த நாள் வேறை இரண்டு பேரின்ரை பேர் சொல்லிச்சினம். அவையையும் கனவு காண விட்டிட்டு கடைசியிலை ஓரளவான முடிவுதான் கண்டனாங்கள் இறுதி முடிவு காணயில்லை, மந்திரிவேஷம் பற்றி விரைவிலை அறிவிப்பன் எண்டு பெரிய மந்திரி சொல்ல கனபேர் தலை கிறுகிறுத்துப்போய் ஆரையோ தேடித்திரிஞ்சவை எண்டுகதை.

ஐயா அலரி மரத்தடிக்குப் போய் வந்து சொன்னது தான் கடைசி முடிவோ? இருந்தாலும் இருக்கலாம், இதையெல்லாம் ஆர் கண்டது?

நங்கூரப் புத்தருக்கு மந்திரி வேஷங் குடுத்தால் நாட்டை ஆளுறமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்யப் போறன் எண்டு கிளிநொச்சி வாத்தியார் சொல்லித் திரிஞ்சவராம். ஐயாவைக் கோபப்படுத்தினால் பிரச்



சனையாய் போடும் எண்டுதான் பெரிய மந்திரி அதிமேன்மை மிக்கவருக்கு முன்னாலையும் நாட்டாமைக்கு முன்னாலையும் சத்தியம் பண்ணினதைப் பற்றி ஒண்டும் கதைக்காமல் மௌனமாய் இருந்தவராம்.

நங்கூரப் புத்தரும் இராசதந்திரம் தெரிஞ்ச ஆள்தான் பாருங்கோ, சனத்தோடை கதைக்கேக்கை அதிமேன்மை மிக்கவருக்கு முன்னாலை சத்தியம் பண்ணிறது பிடிக்கயில்லை எண்டு சொன்னாலும் அங்கைபோய் சிரிச்சுக் கொண்டு நிண்டது கதிரையை நினைச்சுத்தான் எண்டது சனத்துக்கு விளங்கும் பாருங்கோ.

ஆர் ராஜினாமாச் செய்தால் என்ன, ஆர் சிரிச்சால் என்ன தேசியப்பட்டியலும், ஐயாவும் கூடிக்கதைச்சு மேலிடத்தைக் கேட்டுத்தான் எல்லாம் செய்தவை எண்டு சொல்லுறவையின்ரை பேச்சையும் மறுக்க முடியயில்லைப் பாருங்கோ.

போட்டு வாங்கிறதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள், குடுத்து வாங்கிறதைப் பற்றிக் கேள்விப்பட்டனிங்களோ? மல்லிகைத் தீவிலை எங்கடை மாவட்டத்திலையும் ஒருத்தருக்குக் கோமாளி வேஷம் போட்டுவிடுங்கோ எண்டு கேட்டுச் சனம் ஆர்ப்பாட்டம் செய்ததல்லோ? ஆர்ப்பாட்ட முடிவிலை கூத்தாடுகிற கூட்டத் தலைவரிட்டைக் குடுக்கச்சொல்லி மகஜரும் குடுத்ததுகள் எண்டு கேள்விப்பட்டிருப்பியள். எல்லாம் முடிஞ்சு வெளியிலை வந்த சனம் அவை தந்ததைப் பத்திரமாய் அவையிட்டையே திருப்பிக் குடுத்திட்டம் எண்டு சந்தோஷப் பட்டதுகளாம்.

எங்கடை நாட்டை ஆளுற மன்றத்தின்ரை உறுப்பினர் ஒருத்தர் தம்பிக்கு மந்திரி வேஷம் கட்டச்சொல்லி தனக்கு ஒன்பது பக்கத்தாலை அழுத்தம் எண்டு சொன்னவராம், விசாரிச்சதிலை அவருக்கு ஒன்பது சகோதரங்கள் எண்டு சொல்லிச்சினம். அவர் குடுத்த அழுத்தத்திலைதான் மல்லிகைத்தீவிலை ஆர்ப்பாட்டம் நடந்தது எண்டும் ஒரு கதை. சூழலைப் பாதுகாக்கிறவருக்கு குடுக்கப்போகினம் எண்டதைக் குடுக்க விடாமல் புடுங்கிறதுக்குத்தான் ஆர்ப்பாட்டம் நடந்தது எண்டும் கதை உலாவுது. கேள்விப் பட்டதைச் சொல்லுறன்.

கொஞ்சக்காலம் அவர் பிறந்த வீட்டைப் பாக்கிறதுக்கு சனம் அலை மோதினது தெரியும்தானே. பிறகு அவர் இஞ்சை இருந்தவர் அங்கை இருந்தவர் எண்டு இரண்டு, மூண்டு வீடுகளைக் காட்டினவை. அங்கையும் சனமெண்டால் சனம். இதுக்கிடையிலை வீரவம்சத்திலை வந்தவர் கிளிநொச்சியிலை தண்ணித் தொட்டிக்குள்ளையும் கொஞ்சக்காலம் இருந்தவர் எண்டு கதைவிட, தெற்கையிருந்து வாற சனம் விழுந்து கிடக்கிற தண்ணித் தொட்டியையும் சுத்திக் கும்பிட்டதுகள்

கடைசியாய் தெற்கையிருந்து வாற சனம் மாத்தி யோசிக்குதுகள் - பிள்ளையார் பிடிக்கப் போக குரங்காகுது எண்டது விளங்கிப்போய் எல்லாத்தையும் இடிச்சுத் தள்ளுகினமாம். இதுக்கு திருவிழாத் தோல்வியும் ஒரு காரணம் எண்டு சொல்லுகினம். இவை சொல்லுகிற இடமெல்லாம் அவர் இருந்தாரோ தெரியாது. ஆனால் வீடுகளை இடிச்சுத் தள்ளிற விளையாட்டைக் கனநாள் விளையாடாத ஆசைதீர அவற்றை பேரைச் சொல்லி இடிச்சு விளையாடுகினம்.

அவை அப்பிடித்தான் செய்வினம். அதைவிடுங்கோ. தம்பி மாவீரன்தான் எண்டு திருவிழாவுக்கு முதல் சொல்லித்திரிஞ்சவை இதைப்பற்றி ஏதும் கதைச்சவையோ எண( சனம் தேடித்திரியுது பாருங்கோ. அந்தாளின்ரை கனவையே தகர்த்தவைக்கு வீடு பெரிய விசயமாய்த் தெரியுமோ?

இந்த முறை எல்லாம் கூத்துக்கதையாய்ப் போச்சுது. கேள்விப்பட்டதை சொல்லாமல் விட மனமில்லாமல் சொல்லிப்போட்டன். அடுத்த முறை புதிசாய் கொஞ்சம் ரகசியங்கள் கதைப்பம். நீங்கள் **vampanantha@gmail.com** க்கு தொடர்ந்து எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

# சிரஞ்சீவியாக 7 இனப்படுகொலையை ஐ.நா.வில் பதித்த முதல் தமிழன்

"எனது பெயர் கிருஷ்ணா சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே இருக்கும் 25 இலட்சம் மக்களைக் கொண்ட பலம் பொருந்திய தமிழீழத்திலிருந்து வந்திருக்கின்றேன். தமிழீழம் போன்ற அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள சிறிய தேசங்கள் உலகின் ஆக உயர்ந்த மன்றமான இந்தச் சபையில் தமது முறையீடுகளை வைக்க முடியாதென்றால் நாங்கள் எங்கேதான் போவது? தயவு செய்து ஒரே ஒரு நிமிடம் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள். சிறிலங்கா அரசாங்கம் தனது இனக்கொலைக் கொள்கையைத் தொடருகின்றது" இந்தக் குரல் 1978 இல் உயர் மன்றமான ஐ.நாவில் ஒர் ஈழத்தமிழரால் பதியப் பட்டது. அனுமதியின்றி பதியப்பட்ட இக் குரல் உலகில் பலரின் கவனத்தையும் ஈழத்தமிழர்கள் பக்கம் ஈர்த்தது. இந்தக் குரலுக்குச் சொந்தக்காரன் எங்கள் யாழ்ப்பாணத்து தமிழர் கிருஸ்ணா வைகுந்தவாசன்.

இனப்படுகொலை பற்றி அதிகம் பேசப்படும் இன்றைய நிலையில் நமது முரசொலி சிரஞ்சீவி எனும் பகுதி அவரைக் நினைந்தேத்துவதில் பெருமை கொள்கின்றது. மறக்கப்படும் வரலாறுகளையும் மனிதர்களையும் அடையாளப்படுத்தும் ஆவணப்படுத்தும் நமது முரசொலியின் முயற்சி இன்று ஓர் கனதியான மனிதனைப் பதிவுசெய்து கொள்கின்றது மனநிறைவாகவுள்ளது.

கிருஸ்ணா வைகுந்தவாசன் யாழ்ப்பாணம் அளவெட்டிக் கிராமத்தில் பிறந்தார். இலங்கை அரச சேவையில் எழுத்தராகப் பணியாற்றி, அரசு எழுத்தர்களின் தொழிற்சங்கத்தில் உறுப்பினராய் இணைந்து அதன் பொதுச் செயலாளரானார். 1950 களில் மக்கள் குரல் என்ற இலங்கையின் முன்னணி இதழின் ஆசிரியராகவும் பணியாற்றினார். தொழிற்சங்கவாதியாக இருந்தபோது சட்டம் பயின்று 1960 இல் இங்கிலாந்து சென்றார். பின்னர் பத்தது ஆண்டுகள் இலங்கை உயர் நீதிமன்ற வழக்கறிஞராக 1971 வரை பணியாற்றினார்.

ஐக்கிய இடதுசாரி முன்னணியின் சார்பில் இலங்கை நாடாளுமன்றத்துக்காக காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டார். தேர்தல் வெற்றிகள் சாதகமாக அமையாமையாலும் வேறு சில காரணங்களின் அடிப்படையிலும் 1971 இல் சாம்பியா நாட்டில் மாவட்ட நீதிபதியாகப் பதவியேற்று சென்றார். 1973, மற்றும் 1975 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பொதுநலவாய நீதிபதிகளின் மாநாடுகளில் சாம்பியாவின் சார்பில் கலந்து கொண்டார். இதன் பின் ஓய்வு பெற்று இலண்டன் சென்று வழக்கறிஞராகப் பணியாற்றினார். 1978 இல், இங்கிலாந்தில் பாரிஸ்டராகப் பணியாற்றியபோது ஐக்கிய அமரிக்காவில் நியூயோர்க்கில் நடைபெற்ற அமெரிக்க வழக்குரைஞர்கள் கழகத்தின் ஆண்டு மாநாட்டில் பிரித்தானியாவின் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டார்

அதே நாட்களில் ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இந்தக் காலகட்டத்தில் அவர் ஐக்கிய நாடுகளின் இந்தியக் குழுவுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றார்.

1978 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் நாள் நண்பகலில் சைப்பிரஸ் நாட்டுத் தலைவரின் ஒரு மணி நேர உரையைத் தொடர்ந்து சுரினாம் நாட்டு பிரதமரின் உரையையும் பொதுச் சபையில் 150நாடுகளைச் சேர்ந்த 2000 பேராளர்கள் வரை கேட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்களில் உலக நாடுகளின் - அரசுத்தலைவர்கள், பிரதமர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தார்கள்.

இந்த வேளையில் அப்போதைய இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் சாகுல் ஹமீது பேச நிகழ்ச்சி நிரலில் அறிவிக்கப்பட்டிருந்த வேளையில் தனது பேச்சை நிகழ்த்த கிருஷ்ணா வைகுந்தவாசன் திட்டம் தீட்டினார்.

உலக நாடுகளைச் சேர்ந்த உயர்மட்டத் தலைவர்கள் சுமார் 2000 பேருக்கு மேல் கூடியிருந்த அந்த உலகின் உயர்சபையில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் எப்படி இருப்பார் என்று எவருக்குமே தெரியாத சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் சபைத் தலைவர் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சரை உரையாற்ற அழைத்த நேரத்தில் தடித்த தலை நரைத்த வைகுந்தவாசன் பேராளர் வரிசை ஒன்றிலிருந்து எழுந்து சென்று மேடையேறிய போது இலங்கையின் பிரதிநிதிகளைத் தவிர வேறுயாருமே வைகுந்தவாசனை அறிந்திருக்கவில்லை.

அன்றையதினம் பொதுச்சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் கொலம்பியாவைச் சேர்ந்த "இன்டேல்சியோ லிவியானோ" என்பவராவார். அவரும் வைகுந்தவாசனை இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் என்றே எண்ணிக் கொண்டார். அதனால் மிக வேகமாக மேடையில் ஏறிய வைகுந்தவாசனுக்கு சிரம்தாழ்த்தி வணக்கம் செய்தார்.

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஐ.நாவில் பேசுவதற்குத் தனது இருக்கையை விட்டு எழும்புவதற்கு முன்னரேயே கிருஷ்ணா



வைகுந்தவாசன் எழுந்து சென்று மிகவும் கம்பீரமான தொனியில் உலக சபையில் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டார்.

"எனது பெயர் கிருஷ்ணா சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே இருக்கும் 25 இலட்சம் மக்களைக் கொண்ட பலம் பொருந்திய தமிழீழத்திலிருந்து வந்திருக்கின்றேன். தமிழீழம் போன்ற அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள சிறிய தேசங்கள் உலகின் மிக உயர்ந்த மன்றமான இந்தச் சபையில் தமது முறையீடுகளை வைக்க முடியாதென்றால் நாங்கள் எங்கேதான் போவது? தயவு செய்து ஒரே ஒரு நிமிடம் என்னைப் பேசுவதற்கு அனுமதியுங்கள். சிறிலங்கா அரசாங்கம் தனது இனக்கொலைக் கொள்கையைத் தொடருகின்றது"

இவ்வளவும் பேசி முடித்ததும் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது. அவரைப் பாதுகாப்பு அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றி விட்டார்கள். இதைத் தொடர்ந்து அவரைச் சூழப் பெரும் எண்ணிக்கையிலான தொலைக்காட்சி ஊடகவியலாளர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்கா வரை
# கப்பல் ஓட்டிய தமிழர்கள் 3

- இராஜகோபால் -

**அத்தியாயம் 03**

பாஸ்போர்ட் எடுக்க வேண்டும். விசா எடுக்க வேண்டும். விமானத்தில் ஏறிக் குந்த வேண்டும். அமெரிக்கா போய்ச் சேர்ந்து விடலாம்!

"அமெரிக்காவுக்கு எப்படிப்போகலாம்?" என்று யாராவது கேட்டால், இப்படித்தான் என்னால் பதில் சொல்ல முடியும்.

ஆனால், பாய்மரக் கப்பலிலே அமெரிக்காவுக்குச் சென்ற பயணக் கதையைக் கேட்கக் கேட்க எனது தேகம் எல்லாம் புல்லரித்தது!

இந்தப் பயணக் கதையை எழுதுவதற்காக அந்தப் பாய்மரக் கப்பலில் சாகசப் பயணம் நடாத்திய சிலரைச் சந்தித்து பல நாட்கள் பேசினேன்.

சிலர் இன்று உயிரோடில்லை; ஆனாலும் அவருடைய வீரசாகசங்களைக் கேட்டறிந்து கொண்டேன்.

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள்.

அந்த மனிதன் வாழ்க்கையைப் பொறுத்த வரையில் இது நூற்றுக்கு நூறு உண்மைதான்!

கடலோடும் கலையில் வல்வெட்டித்துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான புண்ணியமூர்த்தி தண்டையலுக்கு அதிராம் பட்டின கப்பல் முதலாளியிடம் இருந்து அழைப்பு வந்தது!

கப்பலோட்டி, பொருள் ஈட்டித் தர வல்லவர்கள் வல்வெட்டித்துறை தண்டையல்கள் என்பதை தென்னிந்தியக் கப்பல் முதலாளிகள் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள்!

புண்ணியமூர்த்தித் தண்டையல் ஊர்காவல் துறையிலிருந்து தோணி ஒன்றல் தான் அதிராம் பட்டினத்திற்குச் சென்றார்.

முப்பது அல்லது நாற்பது மைல்களுக்கு இடைப்பட்ட தூரம் தான்,

ஊர்காவல்துறையிலிருந்து தென்னிந்தியாவிலுள்ள அதிராம் பட்டினம்.-குஞ்சியப்பு. மாமன் வீட்டுக்குப் போய் வருவது மாதிரித் தான் வல்வெட்டித்துறைக் கடலோடிகளுக்கு தென்னிந்தியா.

புண்ணியமூர்த்தித் தண்டையில் அதிராம் பட்டிணம் நோக்கித் தோணியில் சென்றுகொண்டிருந்த போது, அந்தத் தோணியில் சென்றுகொண்டிருந்த போது, அந்தத்தோணியில், ஒன்பது வயது கூட ஆகாதசிற வன் ஒருவனும் இருந்தான்!

ஆழ்கடலில் போய்க் கொண்டிருக்கி றாமோ என்ற சிறிதளவு பயம் கூட இல்லாமல், குமுறும் அலைகளைக் கிழித்துக் கொண்டு, அசைந்து அசைந்து பேரிரைச்சலுக் கிடையில் செல்லும் தோணிக்குள் இருந்த அச்சிறுவன் சேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்!

தண்டையலுக்கு அச்சிறுவன் மருமகன்!

ஒரு காலத்தில் பாய்மரக் கப்பலில் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்குச் அச் சிறுவன் சாதனைப் பயணம் செய்வான் என்று எவருக்குத்தான் தெரியும்? 1919ஆம் ஆண்டில் இச்சம்பவம் நடந்தது.

"முளையில் தெரிந்த" அச்சிறுவன் இரத்தினசாமியும் பாய்மரக்கப்பலில் அமெரிக்காவுக்குச் சென்ற கடலோடிகளில் ஒருவர்.

ஐயாத்துரை இரத்தினசாமியை வல்வெட்டித்துறை "வித்தனை" என்ற இடத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

நான் சந்தித்தது ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர். இப்போது அவருக்கு வயது 74.

வேட்டி கட்டியிருந்தார். வெறும் மேலுடன் இருந்த அவரது தோற்றமும் பேச்சும் துணிச்சல் காரராக இருக்கவேண்டு



மென்பதை எடுத்த எடுப்பிலேயே காட்டி விட்டன!

தனது மாமா புண்ணியமூர்த்தி தண்டையலுடன் சேர்ந்து, தான் கடலோடு விளையாட ஆரம்பித்த நினைவுகளை ஒன்பது வயதிலிருந்து சொல்லத் தொடங்கினார்:

"அதிராம் பட்டிணத்தில் கப்பலை முதலாளியிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்ட எனது மாமா அங்கிருந்து பிடிகரணையும், அண்ணாமலை வெள்ளை அழகான நாம்பன் மாடுகள் நூறு அளவிலும் ஏற்றிக் கொண்டு ஊர்காவற்துறை நோக்கி வந்தார்...

"முகமட்கஜி" தான் அந்தக் கப்பலின் பெயர்

"முஸ்லிம் முதலாளிக்குச் சொந்தமான கப்பல்

"சமையல் செய்யிறவருக்கு உதவியாக "எடுபிடி வேலை செய்து கொடுப்பேன்.

'பதினொராவது வயதில் எனது மாமாவுடன் கோக்கோ நாடாவிலிருந்து ஏற்றிக் கொண்டு கப்பல் திரும்பும்.

"ஊர்காவற்துறை, காங்கேசன் துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய துறைகளில் கொண்டு வந்த பொருட்களை இறக்குவோம்.

"படிக்காமல் கடடுலோடித் திரிவதிலேயே ஆர்வமாக இருந்த என்னைக் கெட்டு ஒழிந்து போகப் போகிறேனே என்று சொல்லி வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் படிக்க விட்டார்கள்.

"பன்னிரண்டாவது வயதில் படிக்கத் தொடங்கினேன்.

"நனறாக ஞாபகபிருக்கிறது.
1929ஆம் ஆண்டு
அப்போது எனக்கு இருபத்தொரு வயது.

"படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு மலேயாவுக்குப் போய்விட்டேன். "வேலை தேடினேன் அங்கு எனக்கு பொல்லாத காலம். அங்கு ஆட்குறைப்பு நடந்து கொண்டிருந்தது.

"மூன்று வருடம் எப்படியோ அங்கு காலத்தைப் போக்கி விட்டு வீடு நோக்கி ஓடி வந்தேன்!

*(பயணம் தொடரும்...)*

---

ளும் பத்திரிகையாளர்களும் சூழ்ந்து கொண்டார்கள். அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் இதழின் நிருபர் முதலில் அவரிடம் கேள்விக் கணை தொடுத்தார். "நீங்கள் உங்கள் பேச்சில் தமிழீழம் பற்றிக் குறிப்பிட்டீர்களே - இந்த நாடு உலக வரை படத்தில் எங்கே இருக்கிறது?" எனக் கேட்டார். அதற்கு வைகுந்தவாசன் பின்வருமாறு பதில் கொடுத்தார்.

"நான் குறிப்பிடும் தமிழீழம் இந்தியப் பெருங்கடலில் தென்னிந்தியாவுக்குத் தெற்கேயும் இலங்கைக்கு வடக்கேயும் பாக்கு நீரிணையை அண்மித்ததாகவும் வங்காள விரிகுடாக் கடலை ஒரு பக்க எல்லையாகவும் கொண்டிருக்கிறது. அங்கு 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களை இலங்கை அரசாங்கம் இனப் படுகொலைக்குள்ளாக்குகிறது"

இதைத் தொடர்ந்து நியூயோர்க்கில் இருந்து வெளிவரும் "இந்தியா எப்றோட்" என்ற ஆங்கில ஏட்டின் பி.பி.கூப்பர் என்பவர் வைகுந்தவாசனை விரிவான முறையில் பேட்டி கண்டு 1978 ஆம் ஆண்டு அக்டோபர் 20 இதழில் நேர்காணலை பிரசுரித்திருந்தார். அப்பேட்டியில் ஐ.நாவில் பேசும் ஒரு சூழ்நிலையை எப்படி வைகுந்தவாசன் உருவாக்கினார் என்பதை பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

சாம்பியாவின் முன்னாள் மாவட்ட நீதிபதி வைகுந்தவாசன் பல கிழமைகளாக அனுபவப் பட்ட ஒரு வங்கிக்கொள்ளைக்காரன் வங்கிச் செயற்பாடுகளை மிக அவதானமாக நோட்டம் விடுவதுபோல ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளே நடைபெறும் செயற்பாடுகளை மிக அவதானமாக 1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முழுவதும் மிகத் துல்லியமாக றெக்கி எடுத்தார். ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்பினர்கள் ஒழுங்காக அங்கு வந்து போவார்களோ இல்லையோ தெரியாது. ஆனால் வைகுந்தவாசன் மிக ஒழுங்காக உள்ளே போய்வந்தார். பாதுகாப்பு அதிகாரிகள் பார்க்கும் போது தனது கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்துத் தன்னை ஒரு படுபிசி யான பேர்வழியாகக் காட்டிக் கொண்டார். அவரது செயற்பாடுகள் பாதுகாப்பு அதிகாரிகள் மனதில் தான் ஐக்கிய நாடுகள் சபையின் பிசியான பேர்வழி என்ற படிமத்தை உருவாக்குவதில் வைகுந்தவாசன் பெருவெற்றியும் பெற்றார்.

1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் தனது கைப்பெட்டியுடன் வியர்க்க வியர்க்க விறுவிறுக்க அவசர அவசரமாகப் பாதுகாப்பு அதிகாரிகளைக் கடந்து உள்ளே சென்றார். அதி முக்கியமான கமிட்டிக் கூட்டம் ஒன்றுக்குத் தாம் பிந்தி விட்ட ஒருவித பரபரப்பு அவரது முகத்தில் காணப்படும். இதை உறுதிப்படுத்துவது போல வாசலை நெருங்கிய நேரத்தில் தமது கடிகாரத்தை எடுத்து ஏதோ நேரம் பிந்திவிட்டதோ என்று கவலைப்படும் பாவனையுடன் அடிக்கடி பார்த்துக்கொள்வார். இவ்வாறு அவர் செல்லும்போது ஒருபோதும் பாதுகாப்பு அதிகாரிகளால் அவர் தடுக்கப்படவே இல்லை. இவ்வாறு செயற்பட இரும்புபோன்ற நரம்பு தேவை என வைகுந்தவாசன் பத்திரிகையாளர் மத்தியில் குறிப்பிட்டார்.

உலகின் பல ஊடகவியலாளர்கள் வைகுந்தவாசனின் பேட்டிகளைத் தமது பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்கள்.

வைகுந்தவாசன் உலகின் பலதலைவர்களையும் சந்தித்து ஈழத்தமிழர்களின் இன்னல்களை எடுத்துரைத்தார். தன்னால் முடிந்த மட்டும் தமிழர் விடுதலைக்காக குரல் கொடுத்த அவர் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐ.நா. வில் தமிழன் - என் முதல் முழக்கம் எனும் நூலையும் வெளியிட்டார். 2005 ஆம் ஆண்டு ஜனவரி நாலாம் திகதி லண்டனில் காலமானார்.

காலம் பலவற்றை மறக்கடிப்பது போல வைகுந்தவாசனையும் இன்று பலருக்கு தெரியாது. எமது இளைய தலைமுறை இவ்வாறான மனிதர்களைப் பற்றி அறிந்து கொள்வது அவசியமானது. வரலாற்றைப் பதிவதில் நம்மவர்கள் கொண்டுள்ள அக்கறையீனம் மாற்றானுக்கு சாதகமாகிவிடுகின்றது. இதனை உணர்ந்து எம்மவர்கள் வரலாற்றை பதியும் முயற்சியில் இறங்குவோமாக. அதுவே வைகுந்தவாசனைப் போன்ற சிரஞ்சீவிகளை கௌரவப்படுத்தும்

---

## சரியா? தவறா?



பதவிப் பிரமாணச் சர்ச்சை தேவை அற்றதே. பதவிப் பிரமாணம் என்பது அவரவர் பதவியை பொறுத்து எவரவர் முன்னே எடுப்பது என்பது தீர்மானிக்கப்படுகிறது. மிக உயர்ந்த பதவியாளர்களுக்கு முன்னால் எடுக்கப்படும் பதவிப் பிரமாணங்களுக்கு மனதளவில் மதிப்புக் கிடைப்பது இயல்பு. இது எல்லோர்க்கும் வாய்க்காது.

இலங்கையில் மிக உயர்ந்த பதவி ஜனாதிபதிப் பதவி ஆகும். ஏனெனில் நீதிமன்றத்தால் எழுதிய தீர்ப்பைக் கூட மாற்றி எழுதும் வல்லமை இலங்கை ஜனாதிபதிக்கு உண்டு. தீர்ப்பை திருத்தி எழுதும் வல்லமை உடைய அவருக்கு முன்னாலே, அதுவும் உச்சநீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதி பதவிப்பிரமாணம் செய்தல் சாலப் பொருத்தமே.

அதற்கும் மேலாக வெற்றியின் சின்னம் வெற்றிலைச் சின்னம் என்று கூறிய எதிரியின் முன்னாலேயே நிமிர்வுடன் நின்று வெற்றி வாகையைச் சூடிக்கொள்ளுதல் அவர்களுக்கு கொடுக்கும் மிகப் பெரிய செருப்படி ஆகும். எனவே வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் வெற்றிலைக்காரரே. இந்தச் செருப்படியைக் கொடுக்கும் நெஞ்சுரம் யாராலும் முடியாது. இந்த நெஞ்சுரம் இருந்தால் எந்தப் பிரமாணத்தையும் எவரும் எவர் முன்னும் எடுக்கலாம்.


**அபிமன்யு**

ஊடகவியலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அடங்காத் தமிழன் பண்டாரவன்னியன்

● முல்லைமகன்

யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலின் படி சோழப் பேரரசின் காலத்தில் இலங்கையை ஆட்சிபுரிய அனுப்பப்பட்ட வட தமிழகத்து வன்னியகுல தளபதியர்களின் வழி வந்தவன்தான் பண்டார வன்னியன். வன்னியர் என்பதற்கு வலிமையுடையோர் என்று பொருள். பண்டாரவன்னியன் காலத்துக்கும் முன்பே 1621ம் ஆண்டு போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போதும்கூட வன்னிப் பகுதிக்குள் அவர்களால் கால்பதிக்க முடியவில்லை. கடைசிவரை வன்னிக்குள் காலூன்ற முடியாமலேயே இலங்கையில் போர்த்துக்கேய அதிகாரம் முடிவுக்கு வந்தது.

வன்னிக்குள் முதலில் வெற்றிகரமாக நுழைந்தவர்கள் ஒல்லாந்தர்கள்தான். ஒல்லாந்தர்கள் இலங்கைத் தீவைக் கைப்பற்ற வந்த போதே தமிழர் ஆட்சி அங்கு நிலவியது என்பதை அவர்களில் சிலர் எழுதிய குறிப்பு ஏடுகளில் காணலாம். 1782ல் வன்னியை கைப்பற்ற அவர்கள் நடத்திய போர் பற்றி எழுதும் லூயி என்ற வரலாற்று ஆசிரியர். "ஒல்லாந்தர்கள் எத்தனையோ நாடுகளில் போர் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இப்படி வீரத்துடன் போரிட்டவர்களை உலகில் வேறு எங்கும் அவர்கள் காணவில்லை" என்று குறிப்பிடுகிறார். ஒல்லாந்தர்கள் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் மன்னார். திரிகோணமலை வன்னிக்காடுகள் என வன்னி மக்கள் இடைவிடாமல் போர் நடத்தி வந்தனர். அவர்களின் வழியில் வந்த மறக்க முடியாத மாவீரன்தான் பண்டாரவன்னியன்.

வெள்ளையர்கள் முல்லைத்தீவில் அமைத்திருந்த கோட்டையை முற்றாக அழித்து நிர்மூலம் செய்தவன். அவனது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டாரகவன்னியன். முல்லைத் தீவில் இருந்து வற்றாப்பளை அம்மன் கோவில் வரை உள்ள 2000 சதுர மைல் நிலத்தை ஆட்சி செய்து வந்தான். தனது சகோதரர்களை முக்கிய பதவிகளில் வைத்து ஆட்சி செய்து வந்தான். தனது தம்பி கைலாய வன்னியனை அமைச்சராகவும் தனது இறுதி சகோதரன் பெரிய மன்னன் என்ற பெயருடையவனை தளபதியாகவும் நியமித்திருந்தான்.


அதே நேரம் காக்கை வன்னியன். வன்னியின் இன்னொரு நிலப்பரப்பை ஆண்டு வந்தான் .பண்டாரவன்னியனுக்கு நளாயினி என்ற சகோதரியும் உண்டு. நளாயினி தமது அவை புலவர் மீது காதல் கொண்டிருந்தாள். காக்கை வன்னியன் நளாயினி மீது காதல் கொண்டு அவளைத் திருமணம் செய்து தரும்படி பலமுறை பண்டாரவன்னியனுக்கு செய்தி அனுப்பியிருந்தான். ஆனால் பண்டாரவன்னியன் எதோ காரணத்தால் அதற்கு தயங்கி இருக்கிறான்.

இந் நிலையில் புலவரும் நளாயினியும் காதல் கொண்டுள்ளதை கண்ட காக்கை வன்னியன் கோபம் கொண்டு புலவருடன் போரிட்டான். போரில் வென்றது புலவன் !. எனினும் காக்கைவன்னியனை பக்கத்து நாட்டு மன்னன் என்பதாலோ என்னவோ. உயிரோடு திருப்பி அனுப்பினான். அதன்பின்பு தான் புலவனும் அரச குலத்தில் வந்தவன் என்பது பண்டார வன்னியனுக்குத் தெரியவந்தது. எனவே தனது சகோதரியின் காதலுக்கு சம்மதித்தான்.

இதனை அறிந்த காக்கை வன்னியன் பொறாமையால் பொருமினான். பண்டாரவன்னியன் மீது வெள்ளையர்கள் பல முறை படை எடுத்தும் தோல்வி அடைவதைப் பார்த்த காக்கைவன்னியன். தன் ஆசையின் தோல்விக்குப் பழி தீர்க்க வெள்ளையர்களுடன் சேர்ந்து சதி(?) செய்து பண்டாரவன்னியனைக் கொல்ல திட்டமிட்டான்.

நல்லவன் போல நடித்து பண்டாரவன்னியனிடம் மன்னிப்பு கேட்டு சேர்ந்து கொண்டு சமயம் பார்த்து ஆங்கிலப் படைகளிடம் பண்டார வன்னியனை சிக்க வைத்தான்.பலமுறை படை எடுத்து வந்தும் வெல்ல முடியாத பண்டார வன்னியனை மூன்று திசைகளில் இருந்து படை எடுத்து வந்து தாக்கி வென்றனர்.1803 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் கற்சிலைமடுவில் ஆங்கிலேயத் தளபதி ரிபேக் என்பவனுடன் போரிட்டு பண்டாரவன்னியன் வீரசுவர்க்கம் அடைந்தான். அவனது வீரத்தை வியந்து அவனைக் கொன்ற அந்த ஆங்கிலேயத் தளபதி ரிபேக்கே பண்டார வன்னியனுக்கு சிலை ஒன்றும் நடுகல் சின்னமும் வைத்தான். பண்டார வன்னியனின் வாழ்வும் வரலாறும் ஈழத்தமிழர் வரலாற்றில் என்றும் அழியா வீரச் சுவடுகளே

## முதுபெரும் புலவருக்கு முன்னாள் துணைவேந்தர் வாழ்த்து



அண்மையில் தனது நூறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்த முதுபெரும்புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியற் துறைப் பேராசிரியருமான கலாநிதி.என்.சண்முகலிங்கன் நேரில் சென்று வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்தார். புலவர் தொடர்பில் பேராசிரியரின் கருத்தை மதிப்புணர்வுடன் பதிவிடுகின்றோம்.

எங்கள் பண்பாட்டு வரலாற்றில் கடந்த மாதம் 16ம் நாள் (16.09.2013) மேலான நாளாக பதிவானது. தமிழ் மரபின் சான்றோனாக எங்களை வழிப்படுத்தும் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களின் நூறாவது பிறந்த தினத்தில் அவரோடு உறவாடி ஆசிபெறும் பாக்கியம் எமதானது. இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் இந் நூறாவது பிறந்தநாள் பொழுதில் சுற்றமும் நட்பும் சூழ அவரது அழகிய மனது திளைத்திருந்தது. சுதேச அறிவின் புலமை சிறப்பால். அழகிய தமிழின் கவிதைச் சுவையால். அர்ப்பணிப்பான ஆசிரியப்பணியின் மேன்மையினால் ஈழத்து தமிழியலின் பெருமுதுசொமாக பெருமை பெறுபவர்புலவர் மணி வை.க.சிற்றம்பலம் அவர்கள். பண்டைத்தமிழ் இலக்கியம். இலக்கணமரபு சார்ந்த ஞானச்செருக்குடனும் தமிழ் பண்பாட்டின் வாழ்வியல் அனுபவத்துடனும் நிமிர்ந்த அவரது மேன்மைகளை போற்றுதல் நம் கடன்.

பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர் - சமூகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வீதி விபத்துக்கள் குறித்து விழிப்புணர்வுடன் இருப்போம்



## யாழ்ப்பாணக் கம்பன் கழகம்

பெருமையுடன் நடாத்தும்

## நிலாக்காலம்

### சிறப்பு கலையரங்கம்



காலம் : 15.10.2013 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி
இடம்: கம்பன் கோட்டம் நல்லூர்

நிகழ்வுக்குத் தலைமை: **திருமதி.மீரா அருள்நேசன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்-தமிழ்
வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

**சிறப்பு பட்டிமன்றம்**

தலைப்பு :
இலக்கிய களங்களில் சமுதாய சாதனைகளைப் பெரிதும் சாதித்தவை

| கூட்டு முயற்சியே | தனிமுயற்சியே |
| --- | --- |
| கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன் | ந.விஜயசுந்தரம் |
| அ.வாசுதேவா | ச.லலீசன் |
| கு.புரந்தரன் | கு.ஐங்கரன் |

நடுவர்: கம்பவாரிதி இ.ஜெயராஜ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- யாழ்ப்பாணக் கம்பன் கழகம் -

முதலாம் குறுக்குத்தெரு, மணிப்புரிலை [illegible] 1.10.2013 [illegible] அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org